# பாட உள்ளடக்கம்


| | பக்கங்கள் | | |
|---|---|---|---|
| வினாப்பத்திர அமைப்பு | i | - | ii |
| பொருளியல் வினாப்பத்திரம் I | 01 | - | 12 |
| பொருளியல் I இற்கான புள்ளி வழங்கும் திட்டம் | 13 | - | 13 |
| பொருளியல் II இற்கான புள்ளி வழங்கும் திட்டம் | 14 | - | 50 |


Department of Examinations - Sri Lanka

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2021 (2022)

## 21 - பொருளியல்

## புள்ளி வழங்கும் விதம்

- பத்திரம் I

காலம் 2 மணித்தியாலம்
5 விடைகளைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்கள், சகல வினாக்கனுக்கும் விடையளித்தல் வேண்டும்.
ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 50

- பத்திரம் II

காலம் 3 மணித்தியாலம்
இப்பத்திரம் 2 பிரிவுகளைக் கொண்டது
(அ) உப பகுதி – கட்டுரை வினாக்கள் – 05
(ஆ) உப பகுதி – கட்டுரை வினாக்கள் 05

குறைந்தது ஒரு பகுதியில் வினாக்கள் 02 வீதம் தெரிவு வினாக்கள் 5 இற்கு விடை எழுதியிருத்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளி வீதம் மொத்த புள்ளிகள் 100.

| | | |
|---|---|---|
| இறுதிப் புள்ளி கணித்தல் | பத்திரம் I | 50 |
| | பத்திரம் II | 100 |
| இறுதிப்புள்ளி | $50+\left(\frac{100}{2}\right)=100$ | |

Department of Examinations - Sri Lanka

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ....................................................................................... ✓ △ 4/5

.......................................................................................

.......................................................................................

(ii) ....................................................................................... ✓ △ 3/5

.......................................................................................

.......................................................................................

(iii) ....................................................................................... ✓ △ 3/5

.......................................................................................

.......................................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations - Sri Lanka

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

° ° °

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

ආර්ථික විද්‍යාව I
பொருளியல் I
Economics I

**21 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**
* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* 1 தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில்** புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. பொருளியல் தொடர்பில் மிக முழுமையான சுருக்கமான வரைவிலக்கணமாவது 'பொருளியல்' என்பது,
   (1) தமது பிரசைகளுக்கு நன்மையளிக்கும் வண்ணம் சமூகத்தில் எவ்வாறு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கலாம் என்பது பற்றிய கற்கையாகும்.
   (2) உலக சந்தையில் நாடுகள் பொருட்களையும் சேவைகளையும் எவ்வாறு வர்த்தகம் செய்கின்றன என்பது பற்றிய கற்கையாகும்.
   (3) சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்காதவாறு பொருட்களையும் சேவைகளையும் எவ்வாறு உற்பத்தி செய்வது என்பது பற்றிய கற்கையாகும்.
   (4) வரையறுக்கப்பட்ட விருப்பங்களுக்கு மத்தியில் வரையறுக்கப்படாத வளங்கள் எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன என்பது பற்றிய கற்கையாகும்.
   (5) வரையறுக்கப்படாத விருப்பங்களைப் பூர்த்தி செய்ய அருமையான வளங்களை எவ்வாறு ஒதுக்கீடு செய்வது என்பது பற்றிய கற்கையாகும்.

2. உற்பத்தி இயல்தகவு எல்லை நேர்கோடாக அமைவது,
   (1) வளங்கள் பூரணமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்படுவதனாலாகும்.
   (2) கூடிச் செல்லும் அமையச்செலவு விதியினாலாகும்.
   (3) பொருளாதாரத்தில் நிலவும் வினைத்திறனின்மையினாலாகும்.
   (4) அமையச்செலவு நிலையாகக் காணப்படுவதனாலாகும்.
   (5) வளங்கள் ஓரினத்தன்மை வாய்ந்தவைகளாக இல்லாது இருப்பதனாலாகும்.

3. பின்வருவனவற்றுள் எது தாராள சந்தைப் பொருளாதாரமொன்றின் அடிப்படைப் பண்பாகும்?
   (1) உற்பத்தி தொடர்பில் அரசாங்கத்தின் தீவிரக் கட்டுப்பாடு நிலவுதல்
   (2) ஏற்றுமதிகளை விடக் கூடிய இறக்குமதிகள் காணப்படல்
   (3) வளங்கள் பொது உரிமையாகக் காணப்படல்
   (4) தனியார் சொத்துக்கள்
   (5) அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளும் சம்பளங்களும்

4. தொழிற்பிரிப்பினால் ஏற்படும் நன்மை **அல்லாதது** எது?
   (1) தொழிற்படையின் நெகிழும் தன்மை அதிகரித்தல்
   (2) பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்கான மொத்தச் செலவு குறைவடைதல்
   (3) வினைதிறன் அதிகரித்தல்
   (4) புத்தாக்கங்களை அறிமுகப்படுத்தும் ஆற்றல் அதிகரித்தல்
   (5) வருமானப் பகிர்வு சமத்துவம் அதிகரித்தல்

Department of Examinations - Sri Lanka

5. அரிசி விலை அதிகரிக்கும்போது எதிர்பார்க்கப்படுவது,
   (1) அரிசியின் கேள்வித் தொகை அதிகரிப்பாகும்.
   (2) அரிசியின் நிரம்பல் தொகை வீழ்ச்சியாகும்.
   (3) அரிசியின் கேள்வித் தொகை வீழ்ச்சியாகும்.
   (4) அரிசிக்கான கேள்வி வீழ்ச்சியாகும்.
   (5) அரிசி நிரம்பல் அதிகரிப்பாகும்.

6. ஆடையுற்பத்தியின் பிரதான உள்ளீடு புடவை எனக் கொள்க. ஏனையவை மாறாத நிலையில் புடவை விலை வீழ்ச்சியடையுமாயின், அதன்போது எதிர்பார்க்கப்படுவது,
   (1) புடவைகளின் கேள்வி அதிகரிப்பாகும்.
   (2) ஆடைகளின் நிரம்பல் அதிகரிப்பாகும்.
   (3) ஆடைகளின் நிரம்பல் வீழ்ச்சியாகும்.
   (4) ஆடைகளுக்கான கேள்வி அதிகரிப்பாகும்.
   (5) ஆடைகளுக்கான கேள்வி வீழ்ச்சியாகும்.

7. X பொருளின் நிரம்பல் தொழிற்பாடு $Q_s = 8P$ என்னும் சமன்பாட்டினால் குறிப்பிடப்படுவதுடன் அதில் P பொருளின் விலையையும் $Q_s$ நிரம்பல் செய்யப்படும் தொகையையும் காட்டுகின்றன. இச்சமன்பாட்டுக்கமைய X பொருளின் நிரம்பல் விலை நெகிழ்ச்சி
   (1) 1.0 ஆகும் (2) −1.0 ஆகும் (3) 8.0 ஆகும் (4) −8.0 ஆகும் (5) 0.1 ஆகும்

8. ஆனைக்கொய்யாப் பழங்களின் சந்தையானது ஒரே நடவையில் இரு சம்பவங்களை எதிர்நோக்குவதாகக் கருதுவோம். ஆனைக்கொய்யாப் பழங்களின் நிரம்பலைப் பாதிக்கும் கடும் வரட்சி நிலை நிலவும் அதேவேளை புற்றுநோயைத் தடுக்க உதவும் மருத்துவ குணம் ஆனைக்கொய்யாப் பழங்களில் உள்ளதாக ஆய்வொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்விரண்டு நிகழ்வுகளும் ஆனைக்கொய்யாப் பழச்சந்தையில் சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகையில் எவ்வாறு தாக்கம் செலுத்தும்?

| | சமநிலை விலை | சமநிலைத் தொகை |
|---|---|---|
| (1) | அதிகரிக்கும் | குறையும் |
| (2) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (3) | குறையும் | குறையும் |
| (4) | அதிகரிக்கும் | நிச்சயமற்றது |
| (5) | குறையும் | நிச்சயமற்றது |

9. X பொருளுக்கான சந்தை தற்போது சமநிலையில் உள்ளதாகக் கருதுக. பின்வரும் நிகழ்வுகளில் X பொருளின் சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை ஆகிய இரண்டும் வீழ்ச்சியடையக் **காரணமல்லாதது** எது?
   (1) X பொருளின் நிரப்புப் பொருளாகிய Y பொருளின் விலை அதிகரித்தல்
   (2) X பொருளின் பதிலீட்டுப் பொருளாகிய Y பொருளின் விலை வீழ்ச்சியடைதல்
   (3) X பொருள் சாதாரண பொருளாக இருப்பதுடன் நுகர்வோரின் வருமானம் வீழ்ச்சியடைதல்
   (4) X பொருள் இழிவுப் பொருளாக இருப்பதுடன் நுகர்வோரின் வருமானம் அதிகரித்தல்
   (5) X பொருளின் சந்தையில் கொள்வனவாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்

10. ஒரு சிறிய நகரத்தில் கீரைக்கான நாளாந்த கேள்வியும் நிரம்பலும் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.


| கிலோகிராம் ஒன்றின் விலை (ரூ.) | நாளாந்த கேள்வித் தொகை (கி.கிராம்) | நாளாந்த நிரம்பல் தொகை (கி.கிராம்) |
|---|---|---|
| 60 | 220 | 310 |
| 55 | 240 | 300 |
| 50 | 260 | 290 |
| 45 | 280 | 280 |
| 40 | 300 | 270 |

போக்குவரத்துச் செலவு உயர்வினால் கீரையின் நிரம்பல் எல்லா விலைகளிலும் 60 கிலோகிராமினால் வீழ்ச்சியடைவதாகக் கொள்க. கீரைக்கான புதிய சமநிலை விலை யாது?
   (1) 60 ரூபா (2) 55 ரூபா (3) 50 ரூபா (4) 45 ரூபா (5) 40 ரூபா

11. ஒரு பொருளின் விலை 40 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக அதிகரித்தல் அப்பொருளின் கேள்வித்தொகை 1600 அலகுகளிலிருந்து 1400 அலகுகளாக வீழ்ச்சியடைவதற்கு காரணமெனக் கருதுக. கேள்வி வளையியில் இவ் வீச்சினுள் கேள்வியின் விலை நெகிழ்ச்சி
(1) − 6.0 ஆகும். (2) − 3.0 ஆகும். (3) − 0.7 ஆகும். (4) − 0.6 ஆகும். (5) − 0.3 ஆகும்.

12. ஒரு பொருளின் தாராளச் சந்தைச் சமநிலை விலையை விட உயர்வான உத்தரவாதக் குறைந்தபட்ச விலை ஒன்றை அறிமுகப்படுத்தும்போது அரசாங்கம் தாங்க வேண்டிய செலவு மிகக் கூடியதாக இருப்பது,
(1) கேள்வி மற்றும் நிரம்பல் ஆகிய இரண்டும் விலை நெகிழ்வுள்ளதாக இருக்கும்போதாகும்.
(2) கேள்வி மற்றும் நிரம்பல் ஆகிய இரண்டும் விலை நெகிழ்வற்றதாக இருக்கும்போதாகும்.
(3) கேள்வி விலை நெகிழ்வுள்ளதாகவும் நிரம்பல் விலை நெகிழ்வற்றதாகவும் இருக்கும்போதாகும்.
(4) கேள்வி விலை நெகிழ்வற்றதாகவும் நிரம்பல் விலை நெகிழ்வுள்ளதாகவும் இருக்கும்போதாகும்.
(5) கேள்வி மற்றும் நிரம்பல் ஆகிய இரண்டும் அலகு விலை நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும்போதாகும்.

13. பின்வரும் வரைபடம் X பொருளின் சந்தையினைப் பிரதிபலிக்கின்றது. போட்டிச்சந்தை சமநிலை E புள்ளியாகும். அரசாங்கம் X பொருள் உற்பத்தியின் மீது அலகு வரியை விதிப்பதாகக் கருதுக.




வரியினால் அரசாங்கத்தின் வருவாய் மற்றும் இழக்கப்பட்ட நலன் என்பன வரைபடத்தின் எப்பகுதியினால் காட்டப்படுகிறது?

| | வருவாய் | இழக்கப்பட்ட நலன் |
|---|---|---|
| (1) | PNFT | FTE |
| (2) | $0NFQ_3$ | KTE |
| (3) | JPTK | KFE |
| (4) | JNFK | KFE |
| (5) | JNFK | KTE |

14. போட்டிச் சந்தையில் ஒரு பொருளின் சமநிலை விலை அலகொன்றுக்கு 50 ரூபா எனக் கொள்க. அரசாங்கம் சந்தையில் தலையிட்டு அலகொன்றுக்கு 60 ரூபாவாக ஒரு குறைந்தபட்ச விலையை விதிக்கிறது. சந்தையில் கொள்வனவாளர் ஒருவரின் கேள்வி வளையி $Q_d = 240 - 3P$ ஆயின், குறைந்தபட்ச விலை இக் கொள்வனவாளரின் நுகர்வோன் மிகையில் ஏற்படுத்தும் தாக்கம் யாது?
(1) 600 ரூபாவால் அதிகரிக்கும். (2) 600 ரூபாவால் குறையும்.
(3) 750 ரூபாவால் அதிகரிக்கும். (4) 750 ரூபாவால் குறையும்.
(5) 1350 ரூபாவால் குறையும்.

15. குறுங்காலத்தில் உற்பத்தி நிறுவனமொன்றில் பல்வேறு வெளியீட்டு மட்டங்களின் மொத்த செலவுகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| வெளியீட்டு மட்டம் | மொத்த செலவு (ரூ.) | வெளியீட்டு மட்டம் | மொத்த செலவு (ரூ.) |
|---|---|---|---|
| 0 | 100 | 4 | 160 |
| 1 | 120 | 5 | 190 |
| 2 | 130 | 6 | 238 |
| 3 | 138 | 7 | 296 |

இத்தகவல்களின்படி 6 அலகுகள் வெளியீட்டை உற்பத்தி செய்யும்போது சராசரி மாறும்செலவின் அளவு யாது?
(1) 23 ரூபா (2) 28 ரூபா (3) 35 ரூபா (4) 36 ரூபா (5) 48 ரூபா

16. குறுங்காலத்தில் ஒரு நிறைபோட்டி நிறுவனம் 1000 அலகுகள் இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டை உற்பத்தி செய்யும்போது சந்தை விலை அலகொன்றுக்கு 120 ரூபாவாகவும் அலகொன்றின் மாறும்செலவு 100 ரூபாவாகவும் அலகொன்றின் நிலையான செலவு 40 ரூபாவாகவும் உள்ளன. ஏனைய காரணிகள் மாறாத நிலையில் இந்நிறுவனத்தின் குறுங்கால நடத்தையாக அமைய வேண்டியது,
(1) செலவைக் குறைப்பதற்கு வெளியீட்டைக் குறைக்க வேண்டும்.
(2) அலகொன்றின் விலையை 140 ரூபாவுக்கு மேல் அதிகரிக்க வேண்டும்.
(3) நிறுவனம் குறுங்காலத்தில் செயற்படுவதினால் உற்பத்தியைத் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.
(4) சராசரி நிலையான செலவைக் குறைக்கும் பொருட்டு வெளியீட்டை அதிகரிக்க வேண்டும்.
(5) சராசரி மொத்தச் செலவு சந்தை விலையை விட உயர்வாக இருப்பதால் உடனடியாக நிறுவனத்தை மூட வேண்டும்.

17. குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனம் தொடர்பில் பின்வருவனவற்றில் எது சரியானதாகும்?
(1) நிறுவனம் எப்போதும் நேர்க்கணிய பொருளியல் இலாபத்தை உழைக்கும்.
(2) நிறுவனம் எப்போதும் சாதாரண இலாபத்தை உழைக்கும்.
(3) சராசரி மொத்த செலவுக்குக் கீழ் விலை வீழ்ச்சியடையும்போது நிறுவனம் மூடப்படும்.
(4) விலை எல்லைச் செலவுக்கு சமப்படும் புள்ளியில் உற்பத்தியை மேற்கொண்டு நிறுவனம் இலாபத்தை உச்சப்படுத்தும்.
(5) நிறுவனம் எதிர்க்கணிய அல்லது நேர்க்கணிய அல்லது சாதாரண இலாபத்தை உழைக்க முடியும்.

18. பின்வருவனவற்றுள், இலங்கையில் பெரும்பாலும் தனியுரிமைப்போட்டிக் கைத்தொழிலாகக் கருதத்தக்கது எது?
(1) டயர் உற்பத்தி
(2) தொலைக்காட்சி ஒளிபரப்பு
(3) குளிர்பானக் கைத்தொழில்
(4) செய்திப் பத்திரிகைகள்
(5) அழகுக்கலைக் கைத்தொழில்

19. பின்வருவனவற்றுள் பொருளாதாரப் பின்னடைவொன்றின் பண்பு **அல்லாதது**.
(1) முதலீடும் வேலைவாய்ப்பும் வீழ்ச்சியடைதலாகும்.
(2) உள்ளீடுகளின் கேள்வி அதிகரிப்பதனால் உள்ளீடுகளின் விலை அதிகரித்தலாகும்.
(3) முதலீட்டாளர்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைதலாகும்.
(4) பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி வீழ்ச்சியடைதலாகும்.
(5) கைத்தொழில்களில் மிகை உற்பத்தி இயலளவு காணப்படுதலாகும்.

20. நெல் விவசாயி ஒருவர் தனது நெல்லை அரிசி ஆலை உரிமையாளருக்கு 10 000 ரூபாவுக்கு விற்கிறார். அரிசி ஆலை உரிமையாளர் அவ்வரிசியை அரிசி மா ஆலை உரிமையாளருக்கு 12 000 ரூபாவுக்கு விற்கிறார். மா ஆலை உரிமையாளர் மாவினை நூடில்ஸ் உற்பத்தியாளருக்கு 15 000 ரூபாவுக்கு விற்கிறார். நூடில்ஸ் உற்பத்தியாளர் நூடில்ஸை 20 000 ரூபாவுக்கு நுகர்வோருக்கு விற்பனை செய்கிறார். இச்செயன்முறையில் அரிசி ஆலை உரிமையாளர் மற்றும் நூடில்ஸ் உற்பத்தியாளர் ஆகிய இருவரால் உருவாக்கப்பட்ட மொத்த கூட்டப்பட்ட பெறுமதி யாது?
(1) 10 000 ரூபாவாகும்.
(2) 7 000 ரூபாவாகும்.
(3) 5 000 ரூபாவாகும்.
(4) 3 000 ரூபாவாகும்.
(5) 2 000 ரூபாவாகும்.

21. பின்வருவனவற்றுள் வருமான அணுகுமுறை ஊடாக மொத்தத் தேசிய உற்பத்தியைக் கணிப்பீடு செய்யும்போது அதில் **உள்ளடக்கப்படாதது** எது?
(1) ஊழியர்களின் வருமானங்கள்
(2) கலப்பு வருமானங்கள்
(3) நிலையான மூலதன நுகர்வு
(4) உற்பத்தியின் மீதான மானியங்கள் கழித்த ஏனைய வரிகள்
(5) ஊழியர் சேமலாப நிதிக்கு ஊழியர்களின் பங்களிப்பு

22. 2019 ஆம் ஆண்டில் நடைமுறைச் சந்தை விலைகளில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அமெரிக்க டொலர்களில்,
(1) 79 பில்லியன்களாகும்.
(2) 80 பில்லியன்களாகும்.
(3) 83 பில்லியன்களாகும்.
(4) 84 பில்லியன்களாகும்.
(5) 88 பில்லியன்களாகும்.

Department of Examinations - Sri Lanka

**23.** பெருக்கிகளுக்கு இடையிலான பின்வரும் தொடர்புகளில் சரியானது யாது?
(1) முதலீட்டுப் பெருக்கி > வரிப்பெருக்கி = சமநிலைப் பாதீட்டுப் பெருக்கி
(2) வரிப்பெருக்கி = முதலீட்டுப் பெருக்கி < சமநிலைப் பாதீட்டுப் பெருக்கி
(3) வரிப்பெருக்கி > முதலீட்டுப் பெருக்கி > சமநிலைப் பாதீட்டுப் பெருக்கி
(4) வரிப்பெருக்கி > முதலீட்டுப் பெருக்கி = சமநிலைப் பாதீட்டுப் பெருக்கி
(5) முதலீட்டுப் பெருக்கி > வரிப்பெருக்கி > சமநிலைப் பாதீட்டுப் பெருக்கி

**24.** அரசதுறையற்ற மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் மொத்தச் சேமிப்புச் சார்பு (S) = $-100 + 0.25Y$ ஆகவும் முதலீடு (I) 800 மில்லியன் ரூபாவாகவும் உள்ளதாகக் கொள்க. இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டம் எவ்வளவு?
(1) 1 200 மில்லியன் ரூபா
(2) 2 800 மில்லியன் ரூபா
(3) 3 200 மில்லியன் ரூபா
(4) 3 600 மில்லியன் ரூபா
(5) 3 900 மில்லியன் ரூபா

**25.** பின்வருவனவற்றுள் எதனை வருமானச் சுற்றோட்டத்தில் வெளிப்பாய்ச்சல்களுக்கான ஓர் உதாரணமாகக் குறிப்பிடலாம்?
(1) முதலீடு
(2) மானியங்கள்
(3) இறக்குமதிகள்
(4) அரசாங்கக் கொள்வனவுகள்
(5) ஏற்றுமதிகள்

**26.** தரப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு நாட்டின் பொதுவிலை மட்டம் மும்மடங்காக அதிகரித்ததாகக் கருதுக. அக்காலப்பகுதியில் ஒரு குடும்பத்தின் வருமானம் 40 000 ரூபாவிலிருந்து 80 000 ரூபாவாக அதிகரித்தது. இக்குடும்பத்தின் பெயரளவு மற்றும் மெய் வருமானத்திற்கு யாது நிகழ்ந்தது?

| | பெயரளவு வருமானம் | மெய் வருமானம் |
|---|---|---|
| (1) | அதிகரித்தது | குறைந்தது |
| (2) | குறைந்தது | குறைந்தது |
| (3) | அதிகரித்தது | அதிகரித்தது |
| (4) | குறைந்தது | அதிகரித்தது |
| (5) | அதிகரித்தது | மாறவில்லை |

**27.** வீட்டுத்துறையினரால் ஒரு சொத்தாகப் பணம் வைத்திருப்பதற்கு அதிகளவில் கேள்வி ஏற்படுகின்றது,
(1) பொதுவிலை மட்டம் அதிகரிக்கும் போதாகும்.
(2) பெயரளவு தேசிய வருமானம் குறைவடையும் போதாகும்.
(3) பெயரளவு தேசிய வருமானம் அதிகரிக்கும் போதாகும்.
(4) பெயரளவு வட்டிவீதம் வீழ்ச்சியடையும் போதாகும்.
(5) பிணைமுறிகளின் விலைகள் குறைவடையும் போதாகும்.

**28.** பின்வருவனவற்றுள் திரவத்தன்மை கூடியது எது?
(1) நிலையான வைப்புகள்
(2) அரசாங்க பிணைப் பத்திரங்கள்
(3) கேள்வி வைப்புகள்
(4) மெய்ச் சொத்துகள்
(5) கம்பனிப் பங்குகள்

**29.** வாடிக்கையாளர் ஒருவர் வணிக வங்கியொன்றில் 400 மில்லியன் ரூபா வைப்புச் செய்ததாகவும் வங்கி அவ்வைப்புக்காக 80 மில்லியன் ரூபா நியதி ஒதுக்கினைப் பேணுவதாகவும் கருதுக. ஏனையவை மாறாத நிலையில் வணிக வங்கியிடம் எந்தளவு மிகை ஒதுக்கு காணப்படும்? வைப்புப் பெருக்கியின் அளவு என்ன?


| | மிகை ஒதுக்கு (மில்லியன் ரூபா) | வைப்புப் பெருக்கி |
|---|---|---|
| (1) | 400 | 0.02 |
| (2) | 400 | 0.2 |
| (3) | 320 | 20.0 |
| (4) | 320 | 5.0 |
| (5) | 320 | 0.2 |

Department of Examinations - Sri Lanka

**30.** பின்வருவனவற்றுள் எதன் விளைவாக பணநிரம்பல் அதிகரிக்கும்?
(1) துணைநில் வைப்பு வசதி வீதத்தின் (SDFR) அதிகரிப்பு
(2) மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கு பிணை முறிகளை விற்றல்
(3) கழிவீட்டு வீதம் அதிகரித்தல்
(4) மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைதல்
(5) நியதி ஒதுக்கீட்டு வீதம் வீழ்ச்சியடைதல்

**31.** பொது வளங்களின் பிரதான பண்புகளாக அமைவது,
(1) நுகர்வில் போட்டித்தன்மை கொண்டதும் விலக்குதல் விதிக்கு உட்படாததும் ஆகும்.
(2) நுகர்வில் போட்டித்தன்மை அற்றதும் விலக்குதல் விதிக்கு உட்பட்டதும் ஆகும்.
(3) நுகர்வில் போட்டித்தன்மை அற்றதும் விலக்குதல் விதிக்கு உட்படாததும் ஆகும்.
(4) ஒழுங்குபடுத்தக் கூடியதும் விலக்குதல் விதிக்கு உட்பட்டதும் ஆகும்.
(5) நுகர்வில் போட்டித்தன்மை கொண்டதும் விலக்குதல் விதிக்கு உட்பட்டதும் ஆகும்.

**32.** பின்வரும் வரைபடத்தில் தனியார் மற்றும் சமூக எல்லைச் செலவு வளையிகளும் சந்தைக் கேள்வி வளையியும் காட்டப்பட்டுள்ளன.





இச்சந்தையானது கட்டுப்பாடுகளற்ற தாராள சந்தையாயின், அதில்
(1) வெளியீட்டு மட்டம் சமூகத்தால் விரும்பத்தக்க மட்டத்தில் இருப்பினும் விலை மிகக்குறைந்த பெறுமதியில் இருக்கும்.
(2) வெளியீட்டு மட்டம் சமூகத்தால் விரும்பத்தக்க மட்டத்தை விட குறைவாக உள்ளதாயினும் விலை மிகக்குறைந்த பெறுமதியில் இருக்கும்.
(3) வளப் பங்கீடு மிகவும் வினைத்திறனாக அமையும்.
(4) தேவைக்கு அதிகமான அளவு உற்பத்தி செய்யப்படும்.
(5) தேவையை விடக் குறைவான அளவு உற்பத்தி செய்யப்படும்.

**33.** பாதீட்டு அட்டவணையில் ஆரம்பக் கணக்கு நிலுவை என்பது,
(1) அரசாங்கத்தின் மொத்த செலவுக்கும் மொத்த மீண்டெழும் செலவுக்கும் இடையிலான வேறுபாடாகும்.
(2) அரசாங்கத்தின் பாதீட்டுக் குறைநிலைக்கும் கடன் சேவைச் செலுத்தல்களுக்கும் இடையிலான வேறுபாடாகும்.
(3) மொத்த வரவுகளுக்கும் கடனுக்கான வட்டிச் செலுத்தல்கள் உள்ளடங்கிய மொத்தச் செலவுக்கும் இடையிலான வேறுபாடாகும்.
(4) கொடைப்பணவுகள் உள்ளடங்கிய மொத்த வரவுகளுக்கும் கடனுக்கான வட்டிச் செலுத்தல்கள் உள்ளடங்கிய மொத்த மூலதனச் செலவீட்டிற்கும் இடையிலான வேறுபாடாகும்.
(5) கொடைப்பணவுகள் உள்ளடங்கிய மொத்த வரவுகளுக்கும் கடனுக்கான வட்டிச் செலுத்தல்கள் உள்ளடங்கிய மொத்த மீண்டெழும் செலவுக்கும் இடையிலான வேறுபாடாகும்.

**34.** 2019 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய அரசாங்கத்தின் வெளிநின்ற மொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் அளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக முறையே,
(1) 44.1% ஆகவும் 42.6% ஆகவும் இருந்தது.
(2) 48.2% ஆகவும் 40.3% ஆகவும் இருந்தது.
(3) 35.4% ஆகவும் 46.6% ஆகவும் இருந்தது.
(4) 42.7% ஆகவும் 38.4% ஆகவும் இருந்தது.
(5) 42.2% ஆகவும் 30.0% ஆகவும் இருந்தது.

35. பின்வருவனவற்றுள் நிரம்பல் பக்கக் கொள்கையாகக் கருதப்படக்கூடியது எது?
(1) அரசாங்கத்தின் பாதீட்டுக் குறை நிலையைக் குறைத்தல்
(2) முதலீடுகளை ஊக்குவிக்க தொழில் முயற்சியாளருக்கு முதலீட்டு வரிச்சலுகைகளை வழங்குதல்
(3) இறக்குமதிப் பொருட்களின் மீது தீர்வைகளை விதித்தல்
(4) தனியார் உடைமைத்தொழில் முயற்சிகளை அரச துறைக்கு மாற்றுதல்
(5) மொத்தச் செலவு அதிகரிக்கும் வகையில் அரசாங்கச் செலவீடுகளை அதிகரித்தல்

36. பின்வரும் வரைபடம் A மற்றும் B ஆகிய இரு நாடுகளின் உற்பத்தி இயல்தகவு வளையிகளைக் காட்டுகின்றது. A நாடு 100 மில்லியன் தொன் இறப்பரை அல்லது 50 மில்லியன் தொன் கறுவாவை உற்பத்தி செய்யலாம். B நாடு 200 மில்லியன் தொன் இறப்பரை அல்லது 100 மில்லியன் தொன் கறுவாவை உற்பத்தி செய்யலாம்.




ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டின்படி,
(1) சிறப்புத்தேர்ச்சியடைவதன் மூலம் இரு நாடுகளும் நன்மை பெறலாம்.
(2) கறுவா உற்பத்தியில் A நாட்டை விட B நாட்டில் அமையச் செலவு அதிகமாகும்.
(3) கறுவா உற்பத்தியில் B நாட்டை விட A நாட்டில் அமையச் செலவு அதிகமாகும்.
(4) B நாடு A நாட்டிற்கு கறுவாவை ஏற்றுமதி செய்யும்.
(5) A நாட்டிற்கும் B நாட்டிற்கும் இடையில் வர்த்தகம் நடைபெற முடியாது.

37. பின்வரும் எந்தத் தெரிவு இலங்கையின் நிகழ்கால இறக்குமதி உள்ளடக்கத்தைச் சரியாக எடுத்துக்காட்டுகின்றது?

| | நுகர்வுப் பொருள் | இடைநிலைப் பொருள் | மூலதனப் பொருள் |
|---|---|---|---|
| (1) | 20% | 57% | 23% |
| (2) | 22% | 60% | 18% |
| (3) | 24% | 45% | 31% |
| (4) | 25% | 51% | 24% |
| (5) | 28% | 49% | 23% |

38. பின்வரும் அட்டவணை ஒரு நாட்டின் ஆறு வருட காலப்பகுதியில் நிலவிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விலைச் சுட்டெண்களைக் காட்டுகின்றது.

| ஆண்டு | ஏற்றுமதி விலைச்சுட்டெண் | இறக்குமதி விலைச்சுட்டெண் |
|---|---|---|
| 1 | 100 | 100 |
| 2 | 105 | 108 |
| 3 | 112 | 110 |
| 4 | 116 | 120 |
| 5 | 129 | 129 |
| 6 | 150 | 130 |

முதலாவது ஆண்டுடன் ஒப்பிடுகையில் வர்த்தக மாற்றுவீதம் எந்த ஆண்டில் மிகவும் சாதகமாக உள்ளது?
(1) 2 ஆம் ஆண்டு (2) 3 ஆம் ஆண்டு (3) 4 ஆம் ஆண்டு
(4) 5 ஆம் ஆண்டு (5) 6 ஆம் ஆண்டு

Department of Examinations - Sri Lanka

**39.** இலங்கை முதலீட்டாளர் ஒருவரால் ஜப்பானியக் கம்பனி ஒன்றின் 10 மில்லியன் டொலர் பெறுமதியான பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டதாகக் கருதுக. இக் கொடுக்கல் வாங்கல் இரட்டைப்பதிவுக் கோட்பாட்டின் படி இலங்கையின் சென்மதி நிலுவையில் எவ்வாறு பதியப்படும்?

| | செலுத்தல்கள் | பெறுகைகள் |
|---|---|---|
| (1) | மூலதனக் கணக்கு | முதன்னிலை வருமானக் கணக்கு |
| (2) | ஏனைய மூலதனக் கணக்கு | பட்டியல் முதலீடுகள் கணக்கு |
| (3) | பட்டியல் முதலீடுகள் கணக்கு | ஏனைய மூலதனக் கணக்கு |
| (4) | நிதியியல் பெறுதிகள் | நேரடி முதலீடுகள் கணக்கு |
| (5) | மூலதனக் கணக்கு | பட்டியல் முதலீடுகள் கணக்கு |

**40.** பின்வரும் அட்டவணையில் ஒரு நாட்டின் சென்மதி நிலுவையிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட சில தரவுகள் காட்டப்பட்டுள்ளன.

| வகை | மில்லியன் ரூபா |
|---|---|
| ஏற்றுமதி (பொருள்) | 600 |
| இறக்குமதி (பொருள்) | 800 |
| சேவைகள் (தேறியது) | 30 |
| முதன்னிலை வருமானம் (தேறியது) | −80 |
| இரண்டாம் நிலை வருமானம் (தேறியது) | 150 |
| மூலதனக் கணக்கு (தேறியது) | 60 |

அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகவல்களின்படி இந்நாட்டின் சென்மதி நிலுவை நிலை பற்றிய பின்வரும் கூற்றுகளுள் சரியானது எது?
(1) வர்த்தக நிலுவையில் 180 மில்லியன் ரூபா குறைநிலை நிலவுகின்றது.
(2) முதலீடு மற்றும் நிதிக்கணக்கில் 140 மில்லியன் ரூபா மிகைநிலை நிலவுகின்றது.
(3) நடைமுறைக் கணக்கில் 100 மில்லியன் ரூபா மிகைநிலை நிலவுகின்றது.
(4) நிதிக்கணக்கில் 40 மில்லியன் ரூபா குறைநிலை நிலவுகின்றது.
(5) நிதிக்கணக்கில் 40 மில்லியன் ரூபா மிகைநிலை நிலவுகின்றது.

**41.** மார்ஷல் - லேனர் நிபந்தனையின் படி, நாணயமாற்றுவீதம் தேய்வடைந்த பின்னர் பின்வரும் எந்த நிலைமையின் கீழ் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு முன்னேற்றமடையும்?
(1) இறக்குமதி விலை நெகிழ்ச்சி = −0.6 மற்றும் ஏற்றுமதி விலை நெகிழ்ச்சி = −0.4
(2) இறக்குமதி விலை நெகிழ்ச்சி = −0.8 மற்றும் ஏற்றுமதி விலை நெகிழ்ச்சி = −0.7
(3) இறக்குமதி விலை நெகிழ்ச்சி = −0.3 மற்றும் ஏற்றுமதி விலை நெகிழ்ச்சி = −0.5
(4) இறக்குமதி விலை நெகிழ்ச்சி = −0.4 மற்றும் ஏற்றுமதி விலை நெகிழ்ச்சி = −0.2
(5) இறக்குமதி விலை நெகிழ்ச்சி = −0.6 மற்றும் ஏற்றுமதி விலை நெகிழ்ச்சி = −0.3

**42.** மிதக்கும் (நெகிழ்தன்மை வாய்ந்த) நாணயமாற்றுவீத முறைமையின் கீழ்,
(1) சென்மதி நிலுவை எப்போதும் மிகைநிலையில் இருக்கும்.
(2) சென்மதி நிலுவை எப்போதும் குறைநிலையில் இருக்கும்.
(3) பொருளாதாரம் வெளிநாட்டுப் பாதிப்புக்களிலிருந்து முழுமையாகப் பாதுகாக்கப்படும்.
(4) அந்நிய செலாவணிக்கான கேள்வி மற்றும் நிரம்பலைச் சமப்படுத்துவதற்கு நாணயமாற்று வீதம் சீராக்கப்பட வேண்டும்.
(5) நாணயமாற்று வீதத்தைத் தீர்மானிப்பதில் ஆதிக்கம் செலுத்த அரசாங்கம் தலையிடும்.

**43.** பின்வருவனவற்றுள் துரித பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடையப் பங்களிக்கக்கூடியது எது?
(1) இயற்கை வளங்களை துரிதமாக நுகர்தல்
(2) பாதுகாப்புவாத வர்த்தகக் கொள்கைகள்
(3) ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசாங்க நிதி வசதிகளை அதிகரித்தல்
(4) நுகர்வோர் மானியங்களை அதிகரித்தல்
(5) வீட்டுத்துறை மற்றும் நிறுவனத்துறை மீது உயர் வரி விதித்தல்

Department of Examinations - Sri Lanka

**44.** மனித அபிவிருத்திச் சுட்டெண்ணில் உள்ளடக்கப்படும் முக்கிய சமூக பொருளாதாரப் பரிமாணங்களாவன

(1) நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை, கல்வி மற்றும் சிறந்த வாழ்க்கைத்தரம்
(2) தேடுவாழ்வு, வளர்ந்தோர் எழுத்தறிவு மற்றும் சிறந்த தலைக்குரிய வருமானம்
(3) கணினி எழுத்தறிவு, தொழிலவாய்ப்பு வீதம், வறுமை மட்டம்
(4) கலோரி நுகர்வு, வருமான சமவின்மை, மனிதவள அபிவிருத்தி
(5) பால்நிலை சமத்துவம், கணினி எழுத்தறிவு, உணவுப் பாதுகாப்பு

**45.** 2010 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் ஒரு நாட்டில் வருமானம் உழைப்போரின் வருமானப் பங்குகள், ஐம்பணைகளுக்கமைய பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | 1வது ஐம்பணை | 2வது ஐம்பணை | 3வது ஐம்பணை | 4வது ஐம்பணை | 5வது ஐம்பணை |
|---|---|---|---|---|---|
| 2010 | 5% | 10% | 15% | 25% | 45% |
| 2020 | 4% | 8% | 12% | 26% | 50% |

இவ்வட்டவணையிலிருந்து எடுக்கக்கூடிய முடிவானது, கடந்த பத்து வருட காலப்பகுதியில்,

(1) நாட்டின் வள ஒதுக்கீட்டில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதாகும்.
(2) வருமானப் பங்கீடு அதிகம் சமமற்றதாகி விட்டது என்பதாகும்.
(3) செல்வப் பங்கீடு அதிகம் சமமற்றதாகி விட்டது என்பதாகும்.
(4) குறை வருமானம் உழைப்போரின் பொருளாதார நிலை உயர்வடைந்துள்ளது என்பதாகும்.
(5) குறை வருமானம் உழைப்போரின் வினைத்திறன் குறைவடைந்துள்ளது என்பதாகும்.

**46.** சொல் முறைவழிப்படுத்தல் (Word Processing) துறையானது கணினி அறிமுகத்திற்கு உட்பட்டதைத் தொடர்ந்து கணினி அறிவற்ற தட்டச்சு இயக்குநர்களில் சிலர் தமது வேலைகளை இழந்தனர். இது பின்வருவனவற்றுள் எத்தகைய வேலையின்மைக்கு உதாரணமாகும்?

(1) உராய்வு வேலையின்மை
(2) மறைமுக வேலையின்மை
(3) கட்டமைப்பு வேலையின்மை
(4) பருவகால வேலையின்மை
(5) சக்கரீய வேலையின்மை

**47.** பேண்தகு அபிவிருத்தியில் உள்ளடங்கும் பிரதான மூன்று துறைகளாவன,

(1) சுற்றாடல், பொருளாதாரம் மற்றும் சமூகமாகும்.
(2) சுற்றாடல், பொருளாதாரம் மற்றும் நிர்வாகத்துறையாகும்.
(3) சுற்றாடல், பட்டினி மற்றும் சமூகமாகும்.
(4) சுற்றாடல், சமாதானம் மற்றும் வறுமையாகும்.
(5) சுற்றாடல், பங்குபற்றல் மற்றும் சமூகமாகும்.

**48.** பின்வரும் அட்டவணை கருதுகின்ற பொருளாதாரமொன்றின் தொழிற்சந்தை நிலைமையினைச் சுருக்கமாகத் தருகின்றது.

| ஆண்டு | தொழில் புரியும் வயது சனத்தொகை (மில்லியன்) | தொழில் புரியும் சனத்தொகை (மில்லியன்) | தொழிலற்ற சனத்தொகை (மில்லியன்) |
|---|---|---|---|
| 2018 | 50 | 24 | 6 |
| 2020 | 60 | 32 | 8 |

இத்தகவல்களின் படி பின்வரும் எந்தக் கூற்று சரியானது?

(1) 2018 இல் இருந்து 2020 வரை வேலையின்மை வீதம் அதிகரித்துள்ளது.
(2) 2018 இல் இருந்து 2020 வரை வேலையின்மை வீதம் குறைவடைந்துள்ளது.
(3) 2018 இல் இருந்து 2020 வரை தொழிற்படையின் பங்குபற்றல் வீதம் 60% இலிருந்து 67% ஆக அதிகரித்துள்ளது.
(4) 2018 இல் இருந்து 2020 வரை தொழிற்படையின் பங்குபற்றல் வீதம் குறைவடைந்துள்ளது.
(5) 2018 இல் இருந்து 2020 வரை சனத்தொகை அதிகரித்துள்ள போதிலும் தொழிற்படை மாற்றமின்றிக் காணப்பட்டது.

Department of Examinations - Sri Lanka

**49.** நாடுகள் பற்றிய பொருளாதார வகைப்படுத்தலின் படி உலக வங்கி இலங்கையை மேல்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடாக எந்த ஆண்டில் அறிவித்தது?

(1) 2016 (2) 2017 (3) 2018 (4) 2019 (5) 2020

**50.** நிகழ்காலத்தில் இலங்கையில் அதிக நட்டத்தில் இயங்கும் அரச தொழில் முயற்சிகள் மூன்றுமாவன,

(1) இலங்கை மின்சார சபை, தேசிய லொத்தர் சபை மற்றும் அரசாங்க பொறியியற் கூட்டுத்தாபனம் என்பனவாகும்.

(2) வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான நிறுவனம், இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பனவாகும்.

(3) வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமான நிறுவனம், இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் என்பனவாகும்.

(4) இலங்கை மின்சார சபை, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் என்பனவாகும்.

(5) இலங்கைப் போக்குவரத்துச் சபை, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை சீனிக் கம்பனி என்பனவாகும்.

* * *

Department of Examinations - Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)**

විෂය අංකය / பாட இலக்கம்: **21**

විෂයය / பாடம்: **பொருளியல்**

**ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்**

**I පත්‍රය / பத்திரம் I**

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 4 | 21. | 5 | 31. | 1 | 41. | 2 |
| 02. | 4 | 12. | 1 | 22. | 4 | 32. | 4 | 42. | 4 |
| 03. | 4 | 13. | 4 | 23. | 5 | 33. | 2 | 43. | 3 |
| 04. | 5 | 14. | 4 | 24. | 4 | 34. | 1 | 44. | 1 |
| 05. | 3 | 15. | 1 | 25. | 3 | 35. | 2 | 45. | 2 |
| 06. | 2 | 16. | 3 | 26. | 1 | 36. | 5 | 46. | 3 |
| 07. | 1 | 17. | 5 | 27. | 4 | 37. | 1 | 47. | 1 |
| 08. | 4 | 18. | 5 | 28. | 3 | 38. | 5 | 48. | 3 |
| 09. | 5 | 19. | 2 | 29. | 4 | 39. | 3 | 49. | 4 |
| 10. | 2 | 20. | 2 | 30. | 5 | 40. | 5 | 50. | 2 |

✪ විශේෂ උපදෙස් / **விசேட அறிவுறுத்தல் :**

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

Department of Examinations - Sri Lanka

சියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமை உடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

| | | |
|---|---|---|
| ආර්ථික විද්‍යාව | II | 21 T II |
| பொருளியல் | II | |
| Economics | II | |

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

* உப பகுதி 'அ' இலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களையும் உப பகுதி 'ஆ' இலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* வரைபுத்தாள் வழங்கப்படும்.

## உப பகுதி 'அ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

1. (i) ஓர் உற்பத்திக் காரணியாக நிலம் கொண்டுள்ள **இரு** பொருளியல் பண்புகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) "ஒரு புறநகர்ப் பகுதியில் அழிவடையும் நிலையிலுள்ள பல உயிரினங்களின் வாழிடமாகக் கருதப்படும் 500 ஏக்கர் நிலம் அதன் இயற்கைத் தன்மை குன்றாது பாதுகாக்கப்பட வேண்டுமென அரசாங்க அதிகாரசபை கருதுகின்றது. நகர அபிவிருத்தி அதிகாரசபை அந்நிலத்தில் ஒரு நவீன வீட்டுத் தொகுதியொன்றை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளது."

இச் சம்பவம் தொடர்பில் **அருமை**, **தெரிவு** மற்றும் **அமையச்செலவு** என்பனவற்றின் அடிப்படை அம்சங்களை இனங்கண்டு விளக்குக. (02 × 3 = 06 புள்ளிகள்)

(iii) உற்பத்தி இயலுகை வளையியானது எதிர்க்கணிய சரிவுடையதாகவும் வெளிக்குவிவானதாகவும் இருப்பது ஏன்? (04 புள்ளிகள்)

(iv) (a) கலப்புப் பொருளாதார முறைமையினை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(b) 'இலங்கை ஒரு கலப்புப் பொருளாதாரம் ஆகும்' என்ற கருத்திற்கு ஆதாரமாக அமையும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு **நான்கு** உதாரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(i) – நிலத்தின் நிரம்பல் நிலையானதாகும். நிலத்திற்கு வழங்கப்படும் விலையின் ஓர் அதிகரிப்பு அதன் நிரம்பலில் அதிகரிப்பை ஏற்படுத்தாது.

– நிலத்திற்காக சமூகத்திற்கு உற்பத்திச் செலவு ஏற்படாது.

– நிலம் இயற்கையின் ஒரு கொடையாகும்.

Department of Examinations - Sri Lanka

- நிலம் குறிப்பிட்ட சிறப்பியல்பு வாய்ந்த ஒரு காரணியன்று : அது பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்படலாம்.
- நிலம் அசையுந்தன்மை வாய்ந்ததன்று : அதனை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல இயலாது.
- நிலம் ஒரு அடிப்படைக் காரணியாகும். அது உற்பத்திப் பொருளொன்றின் ஒரு பகுதியாக மாறாது அத்துடன் உற்பத்திச் செயன்முறையினுள் அது மறைந்து போவதில்லை.

**(ஒரு பண்புக்கு 02 புள்ளி ஏதேனும் இரண்டு பண்புகளுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(ii) - நகர்ப்புறப் பகுதியில் அமைந்துள்ள 500 ஏக்கர் நிலப்பகுதி மாற்றுப் பயன்பாடுகளுக்கான கேள்வியைக் கொண்டுள்ளது. சுற்றாடல் அதிகாரசபை அதன் இயற்கைத்தன்மையைப் பாதுகாக்க விரும்புகிறது. அத்தடன் நகர அபிவிருத்தி அதிகார சபை அதனை வீடமைப்புக்காகப் பயன்படுத்த விரும்புகிறது. எனவே அந்நிலப்பகுதி அருமைத்தன்மை வாய்ந்த வளமாகும்.

**(02 புள்ளிகள்)**

- அருமைத்தன்மை காரணமாக நிலத்தின் மாற்றுப்பயன்பாடுகள் மத்தியில் ஒரு தெரிவை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகும் ஒரே நேரத்தில் நிலத்தை இரண்டு தேவைகளுக்காகவும் பயன்படுத்தவது சாத்தியமில்லை. ஆதலால் நிலத்தை அதன் இயற்கைத்தன்மையில் பாதுகாப்பதா ஆல்லது வீடமைப்பதற்கான இடமாகப் பயன்படுத்துவதா என்னும் பயன்பாடுகள் மத்தியில் தெரிவை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

**(02 புள்ளிகள்)**

- தெரிவு என்பது ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக மற்றொன்றை இழப்பதாகும். அது தெரிவு செய்யப்பட்ட நடவடிக்கையின் அமையச் செலவாகும். நிலத்தை அதன் இயற்கைத்தன்மையுடன் பாதுகாப்பதன் அமையச் செலவு வீடமைப்புத்திட்டத்திற்கான நிலமாக விட்டுக்கொடுக்கப்பட்ட அதன் பெறுமதியாகும். நிலத்தை வீடமைப்புத்திட்டத்திற்குப் பயன்படுத்துவதன் அமையச் செலவு இயற்கை வளமாக பேணுவதற்காக விட்டுக்கொடுக்கப்பட்ட நிலத்தின் பெறுமதியாகும்.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 06)**

Department of Examinations - Sri Lanka

(iii)- உற்பத்தி இயல்தகவு வளையியின் எதிர்க்கணியச் சாய்வு உற்பத்தியின் அமையச் செலவைப் பிரதிபலிக்கிறது. ஒரு பொருளின் மேலதிக அலகுகளைப் பெறுவதற்கு மற்றைய பொருளின் அலகுகளை விட்டுக்கொடுக்க வேண்டியது கட்டாயமாகும்

**(01 புள்ளி)**

- உற்பத்தியை அதிகரிக்கும் போது அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு காரணமாக அது வெளிப்புறமாகக் குவிவடைந்துள்ளது. ஒரு பொருளின் உற்பத்தியை சம அளவுகளால் அதிகரிக்கும் போது இழக்க வேண்டியுள்ள மற்றைய பொருளின் தொகை (அமையச் செலவு) படிப்படியாக அதிகரிக்கும்.

**(01 புள்ளி)**

- அமையச் செலவு அதிகரிப்பதற்கான மூன்று காரணங்கள் உண்டு :
  a. வளங்கள் ஓரினத்தன்மை வாய்ந்தவையன்று.
  b. பல்வகைப் பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யப்பயன்படுத்தப்படும் தொழில் நுட்பங்கள் வேறுபட்டவையாகும்.
  c. ஒரு குறித்த பொருளை அல்லது சேவையை உற்பத்தி செய்ய மிகப்பொருத்தமான ஒரு வளம் மற்றுமொரு பொருளை அல்லது சேவையை உற்பத்தி செய்யப் பொருத்தமற்றதாக இருக்கலாம்.

**(ஒரு காரணத்திற்கு 01 புள்ளி வீதம் ஏதேனும் இரு காரணங்களுக்கு 02 புள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(iv)a. - கலப்புப் பொருளாதாரம் என்பது அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சந்தைப் பொருளாதாரத்தினதும் கட்டளைப் பொருளாதாரத்தினதும் அம்சங்களை ஒன்றிணைத்த ஒரு பொருளாதார முறையாகும். அது முதலாளித்துவ முறையினதும் சோசலிச முறையினதும் கலப்பாகும்.

**(02 புள்ளி)**

Department of Examinations - Sri Lanka

b. - வளங்கள் பொதுத்துறைக்கும் தனியார்துறைக்கும் சொந்தமாக இருத்தல்.
- தனியார் துறை மற்றும் அரச துறை நிறுவனங்கள் காணப்படல்.
- தனியார் சொத்துரிமைப்பாதுகாப்பு நிலவுதல்.
- தனியார் துறையானது அரச ஒழுங்குவிதிகளுக்கு உட்படுத்தப்பட்டிருத்தல்.
- கேள்வி நிரம்பல் தன்மைகளுக்கமைவாக ( விலைப்பொறிமுறை ) விலைகள் மாற்றமடைய அனுமதிக்கப்பட்டிருத்தல்.
- வருமான ஏற்றத்தாழ்வைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உதவி செய்தல்.
- உட்கட்டுமானங்களையும் ஏனைய வசதிகளையும் வழங்குவதன் மூலம் அரசாங்கம் தனியார் துறையை ஊக்குவிக்கும்.
- வரிவிதிப்பும் அரசாங்க செலவீடுகளும் காணப்படும்.

**(ஒவ்வொன்றிற்கும் தலா 01 புள்ளி வீதம் ஏதேனும் நான்கு நடவடிக்கைகளுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

2. (i) கேள்வி விதிக்குப் புறநடையாக அமையத்தக்க **இரு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 140 ரூபாவாக உள்ளபோது 22 லீற்றர்களைக் கொள்வனவு செய்யும் ஒரு நுகர்வோர் லீற்றர் ஒன்றின் விலை 160 ரூபாவாக அதிகரிக்கும்போது 18 லீற்றர்களைக் கொள்வனவு செய்வதாகக் கருதுக. இந்நுகர்வோரின் விலைக் கேள்வி நெகிழ்ச்சியைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) ஏனையவை மாறா நிலையில் இழிவுப் பொருளொன்றின் விலை வீழ்ச்சியடையுமாயின் அப் பொருளின் கேள்வித் தொகையானது குறைவடையுமா? அல்லது அதிகரிக்குமா? பதிலீட்டு விளைவு மற்றும் வருமான விளைவு என்பவற்றின் அடிப்படையில் உமது விடையை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) நிரம்பல் வளையியை நகரச் செய்யும் **மூன்று** காரணிகளை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(i) – அந்தஸ்தைக் காட்டும் / பகட்டான நுகர்வு / போலி உயர்வு கேள்வி (வெப்லன் பொருள்கள்)

– விலையினால் தரத்தை மதிப்பிடும் பொருள்கள்

– கிபன் பொருள்கள்

**(ஒவ்வொன்றிற்கும் தலா 02 புள்ளி வீதம் ஏதேனும் இரண்டு விடயங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(ii)– இங்கு வில் நெகிழ்ச்சிச் சூத்திரம் (நடுப்புள்ளி முறை) பயன்படுத்தப்பட வேண்டும்

வில் நெகிழச்சி $\frac{\Delta Q}{\Delta P} \times \frac{P_1 + P_2}{Q_1 + Q_2}$ **(01 புள்ளி)**

$\frac{4}{20} \times \frac{140+160}{22+18}$ **(01 புள்ளி)**

$\frac{4}{20} \times \frac{140+160}{22+18} = -\frac{3}{2} = -1.5$ **(02 புள்ளிகள்)**

**(புள்ளி நெகிழ்ச்சி அடிப்படையில் விடை பெறப்பட்டிருப்பின் புள்ளி வழங்கப்படமாட்டா)**

(iii) – இழிவுப் பொருளொன்றின் விலை வீழ்ச்சியடையும் போது ஏனையன மாறா நிலையில் பொருளின் கேள்வித் தொகை அதிகரிக்கும்.

– இழிவுப் பொருளொன்றின் சார்பு விலை குறைவடையும் போது பதிலீட்டு விளைவின் காரணமாக அதன் கேள்வித் தொகை அதிகரிக்கும். பதிலீட்டு விளைவானது சார்பு விலை மாற்றங்களுடன் எப்போதும் தலைகீழ் தொடர்பு கொண்டிருப்பதனால் சார்பு விலை குறைவடையும் போது பொருளின் கேள்வித் தொகை அதிகரிக்கும்.

**(02 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

- இழிவுப் பொருளொன்றின் விலையில் ஒரு வீழ்ச்சி ஏற்படும் போது அப்பொருளின் கேள்வித் தொகையானது வருமான விளைவின் காரணமாக வீழ்ச்சியடையும். இழிவுப் பொருளொன்றின் வருமான விளைவு எப்போதும் எதிர்க்கணியமாக இருப்பதனால் விலை வீழ்ச்சி காரணமாக ஏற்படும் மெய்வருமான அதிகரிப்பு கேள்வித் தொகை வீழ்ச்சிக்கு ஏதுவாகும்.

**(02 புள்ளிகள்)**

- இழிவுப்பொருள்களைப் பொறுத்தமட்டில் பதிலீட்டு விளைவின் விரிவாக்க விளைவானது வருமான விளைவின் சுருக்க விளைவை விடப் பலம் வாய்ந்ததாக இருக்கும். இழிவுப்பொருளின் விலை வீழ்ச்சியின் காரணமாக எற்படும் மொத்த விலை விளைவு கேள்வித்தொகையின் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.

**(02 புள்ளிகள்)**


**(மொத்தம் 06 புள்ளிகள்)**

(iv) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு காரணியில் ஏற்படும் மாற்றம் நிரம்பல் வளையியை இடம் பெயரச் செய்யும்


- காரணி உள்ளீடுகளின் விலைகள்
- சந்தையிலுள்ள நிரம்பலாளர்களின் எண்ணிக்கை
- தொழினுட்பம்
- வரிகளும் மானியங்களும்
- உற்பத்தி செய்யப்படும் தொடர்பு பட்ட பொருள்களின் விலைகள்
- திட்டமிடப்படாத காரணிகள் (காலநிலை போன்றன)
- மாணவர் கேள்வி வளையியை இடம் பெயரச் செய்யும் மூன்று காரணிகளை இனங்காண வேண்டும். அத்துடன் அக்காரணிகளில் ஏற்படும் மாற்றங்கள் நிரம்பல் வளையிகளில் எவ்வாறு இடப்பெயர்வை ஏற்படுத்தும் என்பதையும் வரைபட உதவியுடன் விளக்க வேண்டும்.

உதாரணங்கள்:

**உள்ளீடுகளின் விலை வீழ்ச்சி நிரம்பல் வளையியை வலப்புறமாக இடம்பெயரச் செய்யும்**





**உள்ளீடுகளின் விலை உயர்வு நிரம்பல் வளையியை இடப்புறமாக இடம் பெயரச் செய்யும்**





Department of Examinations - Sri Lanka


நிரம்பலாளரின் எண்ணிக்கை அதிகரிப்பு நிரம்பல் வளையியை வலப்புறமாக இடம்பெயரச் செய்யும்





நிரம்பலாளரின் எண்ணிக்கை வீழ்ச்சி நிரம்பல் வளையியை இடப்புறமாக இடம்பெயரச் செய்யும்




தொழில் நுட்ப முன்னேற்றம் நிரம்பல் வளையியை வலப்புறமாக இடம்பெயரச் செய்யும்




தொழில் நுட்ப பின்னடைவு நிரம்பல் வளையியை இடப்புறமாக இடம் பெயரச் செய்யும்.




**(வரைபடவிளக்கத்துடன் கூடிய ஏதேனும் ஒரு காரணிக்கு 02 புள்ளிகள் மொத்தம் 06 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

3\. (i) நுகர்வோன் மிகையையும் உற்பத்தியாளன் மிகையையும் வரைவிலக்கணப்படுத்துக. (04 புள்ளிகள்)

(ii) ஒரு உச்சவிலையானது எவ்வாறு மீளமுடியாத இழப்பை (deadweight loss) உருவாக்கும் என்பதனை வரைபடமொன்றின் துணையுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) அரசாங்கம் சோயா உற்பத்தியாளர்களுக்கு கிலோகிராம் ஒன்றிற்கு 100 ரூபா விலையுதவியை வழங்குவதாகவும், மிகை நிரம்பலை உதவி விலையில் அரசாங்கம் கொள்வனவு செய்வதாகவும் கருதுக. சந்தைக் கேள்விச் சமன்பாடுகள், நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

கேள்வி : $Q_D = 240 - 2P$ நிரம்பல் : $Q_s = -210 + 3P$

(a) இவ்விலையுதவித் திட்டத்தின் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு யாது? (04 புள்ளிகள்)

(b) விலையுதவித் திட்டத்தின் பின்னர் நுகர்வோன் மிகையின் அளவும் உற்பத்தியாளன் மிகையின் அளவும் யாவை? (04 புள்ளிகள்)

(c) விலையுதவித் திட்டத்தின் விளைவாக ஏற்படும் மீளமுடியாத இழப்பினைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(i)- நுகர்வோன் மிகை என்பது ஒரு நபர் ஒரு பொருளின் மேலதிக அலகொன்றிற்கு செலுத்த விரும்பும் (எல்லை நன்மை) விலைக்கும் அப்பொருளின் சந்தை விலைக்கும் இடையிலான வேறுபாடாகும்.

- நுகர்வோன் குறித்த பொருளின் சில அலகுகளை கொள்வனவு செய்யும் போது மொத்த (திரண்ட) நுகர்வோன் மிகையானது கொள்வனவு செய்யப்பட்ட ஒவ்வொரு தனிப்பட்ட அலகினதும் மிகைகளின் கூட்டுத் தொகையாகும். இது தனிநபர் கேள்வி வளையிக்கும் சந்தை விலைகோட்டிற்கும் இடைப்பட்ட பிரதேசத்தினால் தரப்படும்.

- சந்தைக்கான நுகர்வோர் மிகையானது தனிப்பட்ட நுகர்வோர் மிகைகளின் கூட்டுத் தொகையாகும். இது சந்தைக் கேள்வி வளையிக்கும் சந்தை விலைக் கோட்டிற்கும் இடைப்பட்ட பிரதேசத்தினால் தரப்படும்.

**(02 புள்ளிகள்)**

- உற்பத்தியாளன் மிகை என்பது ஒரு நிறுவனம் உற்பத்தியின் மேலதிக அலகொன்றை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற விலையிலிருந்து அப்பொருள் அலகு உற்பத்தியின் எல்லைச் செலவைக் (குறைந்த பட்ச நிரம்பல் விலை) கழித்துப் பெறப்படுவதாகும்.

- நிறுவனம் குறித்த ஒரு பொருளின் பல அலகுகளை விற்பனை செய்யும் போது மொத்த உற்பத்தியாளன் மிகையானது விற்கப்பட்ட அலகுகளின் தனித்தனி மிகைகளின் கூட்டுத் தொகையாகும். இது நிறுவனத்தின் நிரம்பல் வளையிக்கும் சந்தை விலைக் கோட்டிற்கும் அடைப்பட்ட பிரதேசத்தினால் தரப்படும்.

**அல்லது**

- நிறுவனத்தின் மொத்த உற்பத்தியாளன் மிகை என்பது விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் மூலம் பெறப்பட்ட மொத்த வருவாய்களுக்கும் மொத்த மாறுஞ் செலவுகளுக்கும் இடையிலான வேறுபாடாகும்.

Department of Examinations - Sri Lanka

- சந்தையின் உற்பத்தியாளர் மிகையானது எல்லாத் தனித்தனி உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தியாளன் மிகைகளின் கூட்டுத் தொகையாகும். இது சந்தை நிரம்பல் வளையியின் மேலும் சந்தை விலைக் கோட்டின் கீழும் உள்ள பிரதேசத்தினால் தரப்படும்.


**(02 புள்ளிகள்)**

(ii)- சந்தைச் சமநிலைவிலைக்குக் கீழே ஒரு உச்சவிலை விதிக்கப்படுமாயின் விலையானது சமநிலை விலைக்குக் கீழே நிர்ணயிக்கப்படும் அத்துடன் உற்பத்தி செய்யப்படும் தொகையும் வீழ்ச்சியடையும். இது பற்றாக்குறைக்கு இட்டுச்செல்லும். ஒரு மீளமுடியாத இழப்பு தோன்றும்

**(01 புள்ளி)**

- மீள முடியா இழப்பு என்பது ஒரு கொள்கை அல்லது நடவடிக்கையானது பறிமாற்றும் செய்யப்படும் தொகையினை சந்தையின் வினைத்திறன் வாய்ந்த தொகைக்குக் கீழே குறைவடையச் செய்யும் போது மொத்த மிகையில் ஏற்படும் இழப்பினைக் கருதும்.

**(01 புள்ளி)**




- மேலுள்ள வரைபடத்தின்படி சந்தைச் சமநிலை விலை PE ஆகவுள்ளதுடன் உச்சபட்சவிலை P1 ஆகும். உச்சவிலையானது சமநிலையைவிட குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதனால் அவ்விலையில் நிரம்பல் செய்யப்படும் தொகை Q1 ஆகும் இது சந்தைச் சமநிலைத் தொகையாகிய QE யைவிடக் குறைவானதாகும்.

- உச்சபட்சவிலையில் நிரம்பல் செய்யப்படும் தொகை வீழ்ச்சியடைவதனால் சமநிலை விலையில் நுகர்வோரும் உற்பத்தியாளரும் அனுபவித்த பொருளியல் மிகையானது ABC என்னும் முக்கோணப் பிரதேசத்தினால் காட்டப்படும் பகுதியினால் வீழ்ச்சியடையும். சமூகத்திற்கு ஏற்படும் இந்த இழப்பு மீளமுடியாத நலனிழப்பு எனக் கூறப்படும

**(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி வரைபடத்தைப் பயன்படுத்திய விளக்கத்திற்கு 01 புள்ளி)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

(iii) a. அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு :

உதவித்திட்ட விலையில் சந்தைக் கேள்வித் தொகை = 240 – 2(100)
240 – 200 = 40 அலகுகள்

**(01 புள்ளி)**

உதவித்திட்ட விலையில் சந்தை நிரம்பல் தொகை = - 210 + 3(100)
– 210 + 300 = 90 அலகுகள்


**(01 புள்ளி)**

மிகை நிரம்பல் QS – QD = 90 – 40 = 50 அலகுகள் **(01 புள்ளி)**

அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு = 50 x 100 = ரூபா. 5000 **(01 புள்ளி)**

b. அரசாங்கத்தின் தலையீடற்ற (ஒழுங்குமுறைப் படுத்தப்படாத) சந்தைச் சமநிலை :

(கேள்வி) QD = 240 – 2P (நிரம்பல்) QS = - 210 + 3P
240 – 2P = -210 + 3P 5P = 450 ; P = 90 Q = 60




விலையுதவியின் பின்னர் நுகர்வோன் மிகை : = {(120 – 100) x 40} ÷ 2 = Rs. 400

**(02 புள்ளிகள்)**

விலையுதவியின் பின்னர் உற்பத்தியாளன் மிகை = {(100 – 70) x 90} ÷ 2 = Rs. 1350

**(02 புள்ளிகள்)**

c. – **விலையுதவித் திட்டத்தினால் விளையும் மீள முடியா நலனிழப்பு:** இங்கு ஒரு கொள்கை அல்லது நடவடிக்கை வினைத்திறன் வாய்ந்த சந்தைச் சமநிலைத் தொகையை விடக் கூடுதலாக பரிமாற்றத்திற்கு இட்டுச் செல்வதனால் மொத்த மிகையில் ஏற்படும் மீளமுடியாத இழப்பாகும் இங்கு சமநிலைத் தொகை 60 ஆனால் விலையுதவித்திட்டத்தின் விளைவாக நிரம்பலாளர்கள் 90 அலகுகளை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள்.



Department of Examinations - Sri Lanka

- இங்கு 30 அலகுகள் மிகையுற்பத்தி செய்யப்படுகிறது.(QD = 60; QS = 90). இது வளங்கள் வினைத்திறனற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவதைக் குறிக்கிறது. 60 அலகுகளுக்கு மேல் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு மேலதிக அலகும் நலனிழப்பை ஏற்படுத்துகிறது ஏனெனில் ஒவ்வொரு மேலதிக அலகினதும் குறைந்த பட்ச நிரம்பல் விலை (எல்லைச் செலவு) அதன் கேள்வி விலையை விட (எல்லை நன்மை) விடக் குடுதலாக உள்ளது. ABC என்னும் பிரதேசம் மீளமுடியா நலனிழப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.


- மீளமுடியா நலனிழப்பு = {(100 – 75) x 30} ÷ 2 = ரூபா. 375


**(02 புள்ளிகள்)**

குறிப்பு:

- 'மீளமுடியா நலனிழப்பு' மற்றும் 'பொருளியல் மிகையின் இழப்பு' ஆகிய எண்ணக்கருக்கள் ஆசிரியர்களால் ஒன்றுக்கொன்று மாற்றிடாகப்பயன்படுத்தப்பட்டுவருகின்ற போதிலும் அவை ஒன்றுக் கொன்று சமமானவையல்ல. மீளமுடியா நலனிழப்பு என்பது வினைத்திறனற்ற ஒரு உற்பத்தித் தொகை யை உற்பத்தி செய்வதனால் நுகர்வோர் மிகையிலும் உற்பத்தியாளர் மிகையிலும் ஏற்படும் வீழ்ச்சியைக் குறிக்கும். அது வள ஒதுக்கீட்டில் ஏற்படும் வினைத்திறனின்மையை அளப்பதற்கான ஓர் அளவை யாகும். பொருளியல் மிகையில் அல்லது நலனில் ஏற்படும் இழப்பு என்பது அரசாங்கக் கொள்கைத் தலையீட்டின் காரணமாக சமூகத்தின் மொத்த நலனில் ஏற்படும் இழப்பைக் குறிக்கிறது. இந்த நலனிழப்பு நுகர்வோர் மிகையிலும் உற்பத்தியாளர் மிகையிலும் ஏற்படும் வீழ்ச்சியினால் மட்டுமன்றி சந்தையில் அரசாங்கத் தலையீட்டின் காரணமாக ஏற்படும் அரசாங்கச் செலவு அதிகரிப்பினாலும் (வரியிறுப்பாளர்களின் வளங்கள்) ஏற்படுகிறது.

- மீள முடியாத இழப்பு என்பது சிறப்பாக மிகையுற்பத்தியின் காரணமாகவோ குறையுற்பத்தியின் காரண–மாகவோ நுகர்வோன் மிகையிலும் உற்பத்தியாளர் மிகையிலும் ஏற்படும் வீழ்ச்சியைக் கருதும்.




குறையுற்பத்தியின் காரணமாக ஏற்படும் நலனிழப்பு DWL

| | | | | | |
|---|---|---|---|---|---|
| QE | = | சமநிலை வெளியீடு | QE | = | சமநிலை வெளியீடு |
| Q1 | = | குறையுற்பத்தி | Q1 | = | மிகையுற்பத்தி |

மீளமுடியா இழப்பினை நலன் முக்கோணம் அல்லது ஹார்பேர்கர் முக்கோணம் எனவும் அழைப்பர்.

Department of Examinations - Sri Lanka

(iii) c. **மாற்றீடான விடை:**

( தேர்வு நாடிகளில் பலர் மீளமுடியா இழப்பையும் பொருளியல் நலனில் ஏற்படும் இழப்பையும் வேறுபடுத்தியறியத் தவறியுள்ளனர். இந்த குறைபாட்டைக் கருத்திற்கொண்டு மாற்றீடான ஒரு விடை கீழே தரப்படுகிறது.)

- விலையுதவித்திட்டத்தினால் ஏற்படும் மீளமுடியா இழப்பு = விலையுதவி காரணமாக பொருளியல் மிகையில் ஏற்படும் மாற்றம் – விலையுதவித்திட்டத்தை நடைமுறைக்கிட அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு

- விலையுதவிக்கு முன்னர் நுகர்வோன் மிகை = {(120 – 90) x 60} ÷ 2 = 900
- விலையுதவிக்கு முன்னர் உற்பத்தியாளன் மிகை = {(90 – 70) x 60)} ÷ 2 = 600
- விலையுதவிக்கு முன்னர் பொருளியல் மிகை = 900 + 600 = 1500

**(01 புள்ளி)**

- விலையுதவிக்கு பின்னர் நுகர்வோன் மிகை = {(120 – 100) x 40)} ÷ 2 = 400
- விலையுதவிக்கு பின்னர் உற்பத்தியாளன் மிகை = {(100 – 70) x 90)} ÷ 2 = 1350
- விலையுதவிக்கு பின்னர் பொருளியல் மிகை = 400 + 1350 = 1750

**(01 புள்ளி)**

- விலையுதவிக்கு பின்னர் பொருளியல் மிகையில் ஏற்படும் மாற்றம் = 1750 – 1500 = 250

- விலையுதவிக்கு பின்னர் மொத்த நலனில் ஏற்படும் மாற்றம் = பொருளியல் மிகையில் ஏற்படும் மாற்றம் – விலையுதவித்திட்டத்தை நடைமுறைக்கிட அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு.

- விலையுதவித் திட்டத்தை நடைமுறைக்கிட அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு = 100 x 50 = 5000

- மொத்த நலனில் ஏற்படும் மாற்றம் (மீளமுடியா இழப்பு) = 250 – 5000 = - 4750

- மொத்த நலனில் ஏற்படும் வீழ்ச்சி 4750

**(02 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 04)**

Department of Examinations - Sri Lanka

4. (i) 'சாதாரண இலாபம்' எனும் எண்ணக்கருவை வரையறுக்குக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் செலவுகளை நிலையான செலவுகள், மாறும் செலவுகள் என வகைப்படுத்துக.

(a) மூலப் பொருட்கள்
(b) தொழிற்சாலைக் கட்டடங்களுக்கான வாடகை
(c) பெற்ற கடன் மீதான வட்டிச் செலுத்தல்கள்
(d) வளமாக்கிகள் (01 × 4 = 04 புள்ளிகள்)

(iii) நிறைநிரம்பிய போட்டிச் சந்தையினை தனியுரிமைச் சந்தையின் கட்டமைப்புடன் ஒப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) "குறுங்காலத்தில் நிறுவனங்கள் நட்டமடையும் போதிலும் தொழிலில் ஈடுபடலாம்." இக்கூற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) "மாதம் ஒன்றிற்கு 200 000 ரூபா சம்பளம் பெறும் கணினி மென்பொருள் பொறியியலாளர் ஒருவர் தனது சொந்த மென்பொருள் அபிவிருத்தி நிறுவனமொன்றை ஆரம்பித்து முயற்சியாளரொருவராகத் தீர்மானித்ததுடன், அவர் அந்நிறுவனத்திலிருந்து மாதாந்தம் 500 000 ரூபாவை வருமானமாகப் பெறுகிறார்."

(a) இம்முயற்சியாளரின் மாற்றும் உழைப்பு யாது? (03 புள்ளிகள்)

(b) இம்முயற்சியாளர் பொருளியல் வாடகையை உழைக்கிறாரா? உமது விடையை விளக்குக. (03 புள்ளிகள்)

(i) – சாதாரண இலாபம் என்பது முயற்சியாளன் தனது சேவையை அதன் நிகழ்காலப்பயன்பாட்டில் வைத்திருக்க பெறவேண்டுமென எதிர்பார்க்கும் குறைந்தபட்ச செலுத்தலாகும்.

– நிறுவனத்தில் முயற்சியாளனின் பணியை மேற்கொள்வதன் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய செலுத்தலாகையால் சாதாரண இலாபமானது நிறுவனத்திற்கு ஒரு உள்ளார்ந்த செலவாகும். முயற்சியாளனால் இச்செலுத்தலைப் பெறமுடியாதுவிடின் அவன் அல்லது அவள் நிறுவனத்தின் முயற்சியாண்மையிலிருந்து விலகிக் கொள்வான் / கொள்வாள்

**(02 புள்ளிகள்)**

(ii)

| | | | |
|---|---|---|---|
| a. | மூலப்பொருள் | – | மாறுஞ் செலவு |
| b. | தொழிற்சாலைக்க கட்டட வாடகை | – | நிலையான செலவு |
| c. | பெற்ற கடன் மீதான வட்டி | – | நிலையான செலவு |
| d. | வளமாக்கிகள் (உரம்) | – | மாறுஞ் செலவு |

**(ஒன்றிற்கு 01 புள்ளி மொத்தம் 04 பள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

iii. - நிறை போட்டியையும் தனியுரிமையையும் ஒப்பிடல் :

| நிறை போட்டி | தனியுரிமை |
|---|---|
| 1. பெரும் எண்ணிக்கையிலான விற்பனை யாளரும் கொள்வனவாளரும் காணப்படுவர் ஓரினத் தன்மை வாய்ந்த பொருள் விற்கப்படும் | 1. ஒரு பொருளை விறபனை செய்யும் ஒரே-யொரு விற்பனையாளர் காணப்படுவதடன் கொள்வனவாளர் அதிக எண்ணிக்கையில் இருப்பர் |
| 2. இச்சந்தையில் விற்பனையாளர் விலையை ஏற்போராவர் | 2. இச்சந்தையில் விற்பனையாளர் விலையை உருவாக்குவோராவர் |
| 3. இச்சந்தையில் கடுமையான போட்டி நிலவும் | 3. இச்சந்தையில் போட்டி கிடையாது |
| 4. நிறுவனத்தின் கேள்வி வளையி பூரண நெகிழ்வுடையது | 4. நிறுவனத்தின் கேள்வி வளையி கீழ்நோக்கிய சரிவுடையது |
| 5. விற்பனையாளரால் விலையைக் கட்டுப்படுத்த முடியாது | 5. விற்பனையாளரால் விலையை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும் |
| 6. புதிய நிறுவனங்கள் சந்தையில் நுழையத் தடைகளில்லை | 6. புதிய நிறுவனங்கள் சந்தையில் நுழைய கடுமையான கடைகள் உண்டு |
| 7. விற்பனையாளரால் விலை வேறாக்கம் செய்ய முடியாது. கேள்வி நிரம்பல் சக்திகளால் விலை நிர்ணயிக்கப்படும் | 7. தனியுரிமையாளர் வெவ்வேறு வாடிக்கையாளர் குழுக்களிடமிருந்து வேறுபட்ட விலைகளை அறவிடலாம் |
| 8. நிலவும் விலையில் சகல நிறுவனங்களும் விரும்பிய தொகைகளை நிரம்பல் செய்வதால் நிரம்பல் வளையியை இனங்காணலாம் | 8. விலை வேறாக்கம் நிலவுவதால் நிரம்பல் வளை யியை இனங்காண முடியாது |

**(01 வேறுபாட்டிற்கு 01 புள்ளி ஏதேனும் 04 வேறுபாடுகளுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(iv)- நிறுவனம் குறுங்காலத்தில் நட்டத்தில் இயங்கும் ( மொத்த வருவாய் மொத்த செலவை விடக் குறைவாக இருக்கும் அல்லது விலையானது ஓர் அலகிற்கான செலவைவிடக் குறைவாக இருக்கும் ) நிறுவனம் தொடர்ந்து இயங்குவதா அல்லது தற்காலிகமாக தொழிலை முடிவுறுத்துவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். தொழில் முடிவுறுத்தல் விதியின் படி குறுங்காலத்தில் விலையானது சராசரி மாறுஞ்செலவைவிடக் கூடுதலாக இருக்குமாயின் நிறுவனம் உற்பத்தியைத் தொடர வேண்டும்

**(01 புள்ளி)**

- நிறுவனம் மூடப்படுமாயின் அது உற்பத்தியை மேற்கொள்ளாது. எனவே மொத்த நிலையான செலவுக்கு சமமான நட்டத்தை அது எதிர்கொள்ள வேண்டும். இதனைத்தவிர்க்க முடியாது. இந்த நட்டம் மிகப்பெரிதாக இருக்கும். எனவே குறுங்காலத்தில் நட்டத்தை எதிர்கொள்ளும் நிறுவனத்தின் பகுத்தறிவான முடிவு அதன் மொத்த வருவாய்கள் அதன் மொத்த மாறுஞ்செலவுகளை ஈடுசெய்யும் வரையில் உற்பத்தியைத் தொடர்வதாக இருக்கும்.

**(01 புள்ளி)**

Department of Examinations - Sri Lanka

- உற்பத்தியைத் தொடர்வதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க நிறுவனம் மொத்த வருவாயை மொத்த மாறுஞ் செலவுடன் ஒப்பிட வேண்டும் நிறுவனத்தின் மொத்த வருவாய் மொத்த மாறுஞ் செலவை விடக் கூடுதலாயின் (TR > TVC) நிறுவனம் தனது மாறுஞ்செலவை ஈடுசெய்வதுடன் நிலையான செலவு களின் ஒரு பகுதியை ஈடு செய்யத் தேவையான மேலதிகமான வருவாயையும் பெற்றுக் கொள்ளும்.

**(01 புள்ளி)**

- மறுபுறம் மாறுஞ் செலவுகள் வருவாய்களை விட அதிகமாயின் (TVC > TR) நிறுவனமானது உற்பத்தியின் செலவுகளையேனும் ஈடுசெய்ய முடியாது இதனால் அது உடனடியாகத் தொழிலை முடிவுறுத்த வேண்டும்.

**(01 புள்ளி)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(v) a. இம் முயற்சியாளரின் மாற்றல் உழைப்பு ( குறைந்த பட்ச நிரம்பல் விலை ) மாதமொன்றிற்கு ரூபா. 200, 000 ஆகும்.

**(03 புள்ளிகள்)**

b. ஆம். வியாபாரம் எதிர்பார்த்தபடி செயற்படுமாயின் முயற்சியாளர் பொருளியல் வாடகையை உழைக்க முடியும். அவரது மாற்றல் உழைப்பு மாதமொன்றிற்கு ரூபா. 200, 000 ஆகும்.

எனவே மாதாந்தம் இம்முயற்சியாளர் மாதாந்தம் ரூபா. 300, 000 பொருளியல் வாடகையை உழைக்கலாம்.

**(03 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 06)**

Department of Examinations - Sri Lanka

5: (i) தேசிய வருமானக் கணிப்பீட்டில் பின்வருவன உள்ளடக்கப்படும் நிறுவனத்துறையைக் குறிப்பிடுக.

(a) மீனவர் கூட்டுறவுச் சங்கம்
(b) தென் மாகாணசபை
(c) தேசிய வர்த்தக சம்மேளனம்
(d) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (01 x 4 = 04 புள்ளிகள்)

(ii) ஒரு திறந்த பொருளாதாரத்தின் பின்வரும் பேரினப்பொருளாதாரத் தரவுகளைக் கருதிக் கொள்க.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (Y) = 500
நுகர்வு (C) = 350
வரிகள் - மாற்றல்கள் (தேறிய வரிகள்) = 20
முதலீடு (I) = 150
பாதீட்டுக் குறைநிலை = 120 (எல்லா தரவுகளும் பில்லியன் ரூபாவில்)

இப் பொருளாதாரத்தின் தேறிய ஏற்றுமதிகளின் பெறுமதி யாது? (04 புள்ளிகள்)

(iii) கருதுகோள் ரீதியான மூடப்பட்ட ஒரு பொருளாதாரத்தில் சமநிலைத் தேசிய வருமானம் 800 பில்லியன் ரூபாவாகவும் எல்லை நுகர்வு நாட்டம் (MPC) 0.8 ஆகவும் சாத்திய வருமான மட்டம் 1000 பில்லியன் ரூபாவாகவும் உள்ளதெனக் கருதுக.

(a) இப்பொருளாதாரம் சுருக்க இடைவெளியை எதிர்நோக்குகிறதா அல்லது பணவீக்க இடைவெளியை எதிர்நோக்குகிறதா? அந்த இடைவெளியின் அளவு யாது? (02 புள்ளிகள்)
(b) அரசாங்கம் நேர் வரிகளைப் பயன்படுத்தி இந்த இடைவெளியை நீக்க விரும்புகின்றதாயின் நேர் வரியின் அளவில் ஏற்படுத்தப்பட வேண்டிய அவசியமான மாற்றம் யாது? (02 புள்ளிகள்)

(iv) பின்வரும் அட்டவணையில் ஒரு நாட்டின் தேசிய கணிப்பீட்டுடன் தொடர்புடைய சில தரவுகள் தரப்பட்டுள்ளன.

| வகை | பெறுமதி (பில்லியன் ரூபா) |
|---|---|
| அடிப்படை விலையில் மொத்த பெறுமதிச் சேர்க்கை | 11 500 |
| உலக நாடுகளிலிருந்தான தேறிய முதனிலை வருமானங்கள் | - 300 |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் | 800 |
| நுகர்வோர் செலவு | 8 500 |
| உலக நாடுகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் | 900 |

மேலுள்ள தரவுகளின் அடிப்படையில் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(a) மொத்த உள்நாட்டு உற்பத்தி
(b) மொத்த தேசிய வருமானம்
(c) செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம்
(d) உள்நாட்டு சேமிப்புகள் (02 x 4 = 08 புள்ளிகள்)

(i) (a) மீனவர் கூட்டுறவு சங்கம் – நிதிசாரா உற்பத்தித் துறை
(b) தெற்கு மாகாணசபை – பொது அரசாங்கத் துறை
(c) தேசிய வர்த்தக சம்மேளனம் – வீட்டுத்தறைக்கு சேவை வழங்கும் இலாபநோக்கற்ற நிறுவனங்கள்
(d) சிறி லங்கா இன்சுவரன்ஸ் – நிதி நிறுவனத்துறை

**(01 x 4 = 04 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

(ii) - மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) = C + I + G + NX

- தேறிய ஏற்றுமதிகள் (NX) = GDP – ( C + I + G)

**(01 புள்ளி)**

- பாதீட்டுக் குறைநிலை (BD) = G - தேறிய மாற்றல்கள் (T – Tr.) = 120

BD = G - 20 = 120

G = BD + Net Taxes (T – Tr)

G = 120 + 20 = 140

**(01 புள்ளி)**

- தேறிய எற்றுமதிகள் (NX) = Y - (C + I + G)

NX = 500 – (350 + 150 + 140) **(01 புள்ளி)**

- தேறிய ஏற்றுமதிகள் = 500 – 640 = - 140

= Rs. - 140 பில்லியன் **(01 புள்ளி)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(iii) a. - இப்பொருளாதாரம் சுருக்க இடைவெளியை எதிர்கொள்கிறது ஏனெனில் அதன் மெய்யுற்பத்தி மட்டம் ( ரூபா 800 பில்லியன்) அதன் சாத்திய உற்பத்தி மட்டத்தை (ரூபா 1000 பில்லியன்) விடக் குறைவாக உள்ளது.

**(01 புள்ளி)**

- சுருக்க இடைவெளியின் அளவு ரூபா 200 பில்லியன் (1000 - 800)

**(01 புள்ளி)**

b. - வரிப்பெருக்கி $\frac{b}{1-b} = \frac{0.8}{1-0.8} = \frac{0.8}{0.2} = 4$

**(01 புள்ளி)**

- சுருக்க இடைவெளி = ரூபா. 200 பில்லியன்

- ரூபா. 200 பில்லியன் சுருக்க இடைவெளியை நீக்க நேர் வரிகளை ரூபா 50 பில்லியனால் (200÷4 =50) குறைக்க வேண்டும்.

**(01 புள்ளி)**

**(மொத்தப்புள்ளிகள் 04)**

Department of Examinations - Sri Lanka

(iv) a. மொத்த உள்நாட்டு உற்பத்தி = அடிப்படை விலையில் மொத்தப் பெறுமதிச் சேர்க்கை + உற்பத்திப்பொருள்கள் மீதான மானியங்களைக் கழித்த வரிகள்

**(01 புள்ளி)**

மொத்த உள்நாட்டு உற்பத்தி = 11,500 + 800 = ரூபா. 12,300 பில்லியன்

**(01 புள்ளி)**

b. மொத்தத் தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு உற்பத்தி + ஏனைய நாடுகளிலிருந்தான தேறிய முதனிலை வருமானங்கள்

**(01 புள்ளி)**

மொத்தத் தேசிய வருமானம் = 12,300 + (-300) = ரூபா, 12,000 பில்லியன்

**(01 புள்ளி)**

c. மொத்தத் தேசிய செலவிடத்தக்க வருமானம் = மொத்தத் தேசிய வருமானம் + ஏனைய நாடுகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள்

**(01 புள்ளி)**

மொத்தத் தேசிய செலவிடத்தக்க வருமானம் = 12,000 + 900 = ரூபா, 12,900 பில்லியன்

**(01 புள்ளி)**

d. உள்நாட்டு சேமிப்பு = மொத்த உள்நாட்டு உற்பத்தி – நுகர்வுச் செலவீடு

**(01 புள்ளி)**

SD = 12,300 - 8,500 = ரூபா. 3,800 பில்லியன்

**(01 புள்ளி)**

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

## உபபகுதி - 'ஆ'

(இப்பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவுசெய்க.)

6. (i) பணத்தின் பிரதான தொழிற்பாடுகள் யாவை? (04 புள்ளிகள்)

(ii) வங்கி முறைமை பணவாக்கம் செய்யும் சாத்தியத்தைப் பாதிக்கக்கூடிய காரணிகள் யாவை? (04 புள்ளிகள்)

(iii) ஒரு வணிக வங்கியானது முரண்படும் இரண்டு இலக்குகளை அடைந்து கொள்வதில் அதன் சொத்துக் கட்டமைப்பை எவ்வாறு முகாமை செய்யும்? (06 புள்ளிகள்)

(iv) கோவிட் 19 கொள்ளை நோயினால் வீட்டுத்துறையினர் மற்றும் நிறுவனத்துறையினரின் மீது உருவாகிய நிதி அழுத்தங்களை எதிர்கொள்ள இலங்கை மத்திய வங்கியினால் கடைப்பிடிக்கப்பட்ட பணக்கொள்கையின் முக்கிய பண்புகள் யாவை? (06 புள்ளிகள்)

(i)
- பரிமாற்ற ஊடகம்
- கணிப்பீட்டலகு
- பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமம்
- பெறுமானத் திரட்டு

**(ஒவ்வொன்றிற்கு 01 புள்ளி விதம் மொத்தம் 04 புள்ளிகள்)**

(ii)
- நம்பகத்தன்மை வாய்ந்த வாடிக்கையாளர்கள்
- கடன்களுக்கான கேள்வி
- வங்கியிலுள்ள காசு வைப்புகள்
- பணத்தைக் கைவசம் வைத்திருப்பதற்கான மக்கள் விருப்பம்
- வங்கி முறைமையிலிருந்து வங்கியல்லா நிதிநிறுவனங்களை நோக்கிய பணவெளியேற்றம்
- மிகை ஒதுக்குகளை பேண வங்கிகள் காட்டும் ஆர்வம்
- மத்திய வங்கியின் பணக்கொள்கை

**(ஒவ்வொன்றிற்கு 01 புள்ளி விதம் மொத்தம் 04 புள்ளிகள்)**

(iii) – ஒரு வணிக வங்கியின் ஐந்தொகையில் காணப்படும் சொத்து வகைகள் வங்கியாளனின் இரு முரண்பட்ட குறிக்கோள்களைப் பிரதிபலிக்கும்:
இலாபத்தன்மை மற்றும் பாதுகாப்பு (திரவத்தன்மை)

**(02 புள்ளிகள்)**

– வணிக வங்கிகளும் ஏனைய வியாபார நிறுவனங்களைப் போன்றே இலாபத்தை நாடும் இதனாலேயே வங்கிகள் கடன்களை வழங்குவதுடன் முறிகளையும் கொள்வனவு செய்கின்றன. இவை இரண்டும் வணிக வங்கிகளின் இரு பிரதான வருவாய் உழைக்கும் சொத்துகளாகும். வணிக வங்கிகளின் அடுத்த குறிக்கோள் பாதுகாப்பாகும். ஒரு வங்கியைப்பொறுத்தமட்டில் அதன் பாதுகாப்பு அதன் திரவத்தன்மையில் தங்கியுள்ளது. குறிப்பாக காசு மற்றும் மிகைஒதுக்குகள் போன்ற திரவச் சொத்துகளில் அது தங்கியுள்ளது. காசு மீதான வைப்பாளர்களின் கேள்வியை பூர்த்தி செய்ய வங்கிகள் போதியளவு ஒதுக்குகளைப் பேண வேண்டும்.

**(02 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

- வங்கிகள் உயர் விளைவை ஈட்டித்தரவல்ல சொத்துகளில் முதலீடு செய்வதற்கான உறுதியான ஆர்வத்தைக் கொண்டுள்ளன. பொதுவாக உயர்விளைவை ஈட்டித்தரவல்ல சொத்துகள் திரவத்தன்மையற்றவையாகக் காணப்படுகின்றன. மறுபுறம் திரவத்தன்மைக்கு அதிகளவு முக்கியத்துவம் தரப்பட்டு தேவைப்படும் தொகையைவிடக் கூடுதலாக வங்கிகள் காசொதுக்களை வைத்திருக்குமாயின் அது அவற்றின் இலாபத்தன்மையைப் பாதிக்கும். நிதிவழங்கல் கடன்வழங்கல் மற்றும் முதலீடு போன்ற இலாபமீட்டித்தரவல்ல வாய்ப்புகளை வங்கி இழக்க நேரிடும்.

**(01 புள்ளி)**

- இது இரு குறிக்கோள்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும். வங்கி முகாமைத்துவத்தின் முக்கியமான பணிகளில் ஒன்று வங்கியின் சொத்துக் கட்டமைப்பை இலாபத்தன்மை திரவத்தன்மை என்பவற்றிற்கிடையே சமப்படுத்துவதாகும். உண்மையில் வங்கிகள் அதன் நிதிகளில் மிகச் சிறிய பங்கினை மட்டுமே திரவச் சொத்துகளாக வைத்தக்கொண்டு ஏனையவற்றை முறிகளில் முதலீடு செய்தல் கடன்வழங்கல் போன்ற வருவாய் ஈட்டித்தரும் சொத்துக்களாக வைத்திருக்கும்

**(01 புள்ளி)**

**(மொத்தம் 06 புள்ளிகள்)**

(iv)- இலங்கை மத்தியவங்கியானது 2020இல் முக்கிய கொள்கை வட்டி வீதங்களான துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் துணைநில் கடன் வசதி வீதம் (SDLR) ஆகியவற்றை அவற்றின் வரலாற்று ரீதியாக மிகக் குறைந்த மட்டங்களாகிய 4.50% மற்றும் 5.50% வீதங்களுக்கு குறைத்தது.

- 2020 காலப்பகுதியில் உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் எல்லா வைப்புகள் மீதான நியதி ஒதுக்கு விகிதமானது (SRR) இரு சந்தர்ப்பங்களில் 3 சதவீதம் புள்ளிகளிலிருந்து 2% ஆகக் குறைக்கப்பட்டது. இதன் மூலம் உள்நாட்டு பணச் சந்தையின் திரவத்தன்மையானது அதிகரிக்கப்பட்டது. இந்நடவடிக்கை நிதிநிறுவனங்களின் காசுப்பாய்ச்சல் தடைகளுக்கு மத்தியிலும் அவசர நிதித்தேவைகளுக்கு மத்தியிலும் எழுந்த நிச்சயமற்ற சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டது.

- 2020 ஏப்ரல் மாதத்தில் மத்தியவங்கியானது வங்கி வீதத்தை குறைத்தது. இது மிக அவசரமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படக் கூடிய நிர்வாக ரீதியிலான வட்டிவீதமான இது 500 அடிப்படைப்புள்ளிகளால் 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

- கடனை காலந்தாழ்த்தி மீளச்செலுத்துவதற்கான பரந்த வீச்சிலான சலுகைகள் உல்லாசப் பயணத்துறை பெருந்தோட்டத்துறை தகவல் தொழினுட்பத்துறை மற்றும் ஆடைதயாரிப்புத்துறை போன்ற துறைகளுக்கும் அவற்றிற்கான அடைப்படைச் சேவை வழங்கும் நிறுவனங்களுக்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டது. இந்த நிறுவனங்கள் செயற்பட மூலதனக் கடன்களையும் முதலீட்டுக் கடன்களையும் சலுகை வட்டிவீதங்களில் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- கடனை காலந்தாழ்த்திச் செலுத்துவதற்கான சலுகைகள் முச்சக்கரவண்டிகளை கடன் தவணையில் கொள்வனவு செய்தோருக்கும் சிறுபெறுமதி கொண்ட தனிநபர வங்கிக் கடன்களுக்கும் லீசிங் கடன்களுக்கும் வழங்கப்பட்டன.



Department of Examinations - Sri Lanka

- அத்தோடு வங்கிகள் தமது செயற்பாடற்ற கடன்களை (non performing debts) மீள் தவணைப்படுத்த கேட்டுக்கொள்ளப்பட்டன.

- மத்தியவங்கியானது கடனட்டைகள் மற்றும் அடகுவைத்தல் போன்ற சில நிதிச்சேவை (finaical products) மீது விதிக்கப்பட்டிருந்த மிகை வட்டிவீதங்களை குறைப்பதற்கான ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தவதன் மூலம் விளிம்பு நிலைக் கடன் பெறுவோருக்கு (marginal borrowers) உதவியது.

- வீட்டு அடமானக் கடன்கள் மீதான வட்டிவீதத்தை 7 சதவீத வருடாந்தம் உச்ச வரம்புக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது. .

- மத்தியவங்கியானது சௌபாக்யா கோவிட் கொள்ளைநோய் மீட்சி கடன் திட்டத்தின் கீழ் சலுகைக் கடன் வசதிகளை நடைமுறைப்படுத்தியது. இதன் மூலம் பாதிக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் தமது தொழிலை மீளத்தொடங்குவதற்கான செயற்படு மூலதனத்தை 4.00 வீத சலுகை வட்டிவீதத்தில் வணிக வங்கிகளிடமிருந்து கடன்பெற முடிந்தது.

**(ஒரு கொள்கை நடவடிக்கைக்கு 01 புள்ளி வீதம் மொத்தம் 06 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

7. (i) ஒரு சந்தைப் பொருளாதாரத்தில் சில பொருட்கள் சேவைகள் மிகை நுகர்வுக்கும் வேறுசில குறை நுகர்வுக்கும் உட்படுவது ஏன்? (04 புள்ளிகள்)

(ii) தூய தனியார் பொருளுக்கும் தூய பொதுப் பொருளுக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) தனியார் மயமாக்கலுக்குச் சார்பான **இரண்டு** வாதங்களையும் அதற்கு எதிரான **இரண்டு** வாதங்களையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) பாதீட்டுக்குறை நிலை விரிவடைவதன் பொருளாதார விளைவுகளை விளக்குக. (08 புள்ளிகள்)

(i) - இந்நிலைமையானது நுகர்வின் வெளிவாரிகள் காரணமாக ஏற்படும் சந்தைத் தோல்வியைப் பிரதிபலிக்கிறது. நுகர்வின் வெளிவாரிகள் தனியார் நன்மைக்கும் சமூக நன்மைக்கும் இடையில் வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. விலைப்பொறிமுறையானது ஒரு பொருளின் நுகர்வுடன் தொடர்புடைய எல்லா நன்மைகளையும் செலவுகளையும் கணக்கிடத் தவறும் போது சந்தைத் தோல்வி ஏற்படுகிறது. சமூகரீதியில் உத்தமமான மட்ட நுகர்வை உருவாக்க சந்தையானது தவறிவிடுகிறது.

**(02 புள்ளிகள்)**

- நுகர்வில் எதிர்க்கணிய வெளிவாரிகள் நிலவும்போது தனியார் நன்மைகள் சமூக நன்மைகளை விட உயர்வாக இருப்பதால் மிகையான நுகர்வினை ஏற்படுத்தும்.

**(01 புள்ளி)**

- நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரிகள் நிலவும்போது சமூக நன்மைகள் தனியார் நன்மைகளை விட உயர்வாக இருப்பதால் குறை நுகர்வினை ஏற்படுத்தும்.

**(01 புள்ளி)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(ii)

| தூய தனியார் பொருள்கள் | தூய பொதுப் பொருள்கள் |
|---|---|
| 1. நுகர்வில் போட்டித்தன்மையுண்டு | 1. நுகர்வில் போட்டித்தன்மையில்லை |
| 2. விலக்குதல் விதிக்கு உட்பட்டது | 2. விலக்குதல் விதிக்கு உட்படாதது |
| 3. நிராகரிக்க முடியும் | 3. நிராகரிக்க முடியாது |
| 4. சந்தையால் நிரம்பல் செய்யப்படும் | 4. நிரம்பல் செய்வதில் சந்தை தோல்வியடையும் |

**(02 x 02 = 04 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

(iii) **தனியார் மயப்படுத்தலுக்குச் சார்பான வாதங்கள் :**

- அரசாங்கத்திற்கு அதிக வருவாய் ஈட்டும் வாய்ப்பு
- அதிக போட்டித்தன்மை
- முயற்சியாண்மைக் கலாசாரம் மேம்படல்
- அரசதுறை நிறுவனங்கள் நட்டமடைவதைத் தவிர்த்தல்
- அதிக போட்டித் தன்மை வாய்ந்த விலைகள்
- தர மேம்பாடு
- புத்தாக்கத்திற்கு அதிக ஊக்குவிப்புகள்
- வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவர்தல்

**(02 புள்ளிகள்)**

**தனியார் மயப்படுத்தலுக்குச் எதிரான வாதங்கள் :**

- விலைகள் அதிகரிக்கும்
- சேவைகளின் தரம் குறைவடையும்
- தொழில்வாய்ப்புகள் மற்றும் தொழிற்பாதுகாப்பு இழக்கப்படல்
- அரச சொத்துகள் இழக்கப்படல் / வருடாந்த இலாபங்கள் இழக்கப்படல்
- வெளிநாட்டு உரிமை

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(iv) **பொதுப்படுகடன் அதிகரிப்பு :**

குறைநிலையை நிதியீட்டம் செய்ய அரசாங்கமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலாதாரங்களிலிருந்து கடன் பெறவேண்டியுள்ளது. காலப்போக்கில் இது கடன் சுமை அதிகரிக்க காரணமாகியது.

**பணவீக்க அதிகரிப்பு:**

பாதீட்டுக் குறைநிலையை நிதியீட்டம் செய்ய வங்கித் துறையிடமிருந்து அரசாங்கம் கடன்பெறும்போது பணநிரம்பல் அதிகரித்து பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்தும்.

பணத்தின் வெளியகப் பெறுமதி தேய்வடைதல் உள்நாட்டுப் பணவீக்க அதிகரிப்பும் கடன் சேவைக் கொடுப்பனவு வீதங்களும் நாணயத்தின் பெறுமதித் தேய்வுக்கு இட்டுச்சென்றுள்ளன.

**பாதீட்டுக் குறைநிலை தனியார் கடன்பெறுதலை வெளித்தள்ளுகை செய்துள்ளது**

பாதீட்டுக்குறை நிலையை நிதிப்படுத்த உள்நாட்டு நிதிவளங்களைப் பயன்படுத்துவது தனியார்துறை முதலீட்டுக்கான வளங்களின் பற்றாக்குறைக்கு இட்டுச் செல்லும்.

**வட்டிவீத அதிகரிப்பு:**

வரையறுக்கப்பட்ட அளவிலான நிதிவளங்களுக்காக அரசாங்கத்துறையும் தனியார்துறையும் போட்டியிடுவதானது பொருளாதாரத்தில் வட்டிவீதங்களை அதிகரித்து தனியார்துறை முதலீட்டில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

Department of Examinations - Sri Lanka

**சென்மதிநிலுவைப் பிரச்சினைகள்:**

வெளிநாட்டுக்கடன் மீளச்செலுத்தலானது கடுமையான சென்மதி நிலுவைப்பிரச்சினைக்கு இட்டுச்செல்லும்.

**பேரினப்பொருளாதார நிலையற்ற தன்மை:**

மிகையான நாணய விரிவாக்கம் மற்றும் அதிகரிக்கும் வட்டிவீதங்கள் நாணயப் பெறுமதித் தேய்வு என்பன பேரினப் பொருளாதாரஉறுதிப்பாட்டிற்கு ஊறுவிளைவிப்பனவாகும். பேரினப்பொருளாதார உறுதிப்பாடு நீடித்த பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடையத்தேவையானதாகும்.

**(விளக்கத்துடன் கூடிய ஒவ்வொரு விளைவுக்கும் 02 புள்ளிகள் விளக்கம் இல்லாவிட்டால் ஒவ்வொரு விளைவக்கும் 01 புள்ளி)**

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

8. (i) ஒரேயளவான வளங்களைப் பயன்படுத்தி A நாடு 40 கார்களை அல்லது 40 தொன் உணவை உற்பத்தி செய்யலாம் எனவும் B நாடு 60 கார்களை அல்லது 30 தொன் உணவை உற்பத்தி செய்யலாம் எனவும் கருதுக.

(a) சிறப்புத்தேர்ச்சி ஏற்பட முன்பு ஒவ்வொரு நாட்டினதும் உள்ளகப் பரிமாற்ற வீதம் யாது? (02 புள்ளிகள்)

(b) இப்பொருட்களை உற்பத்தி செய்வதில் இந்நாடுகளுக்கு ஒப்பீட்டு நன்மை உள்ளதா? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) சென்மதி நிலுவைக் கூற்றில் தேசிய ஏற்றுமதிகளுக்கும் நடைமுறைக் கணக்கு நிலுவைக்கும் இடையிலான வேறுபாடு யாது? (04 புள்ளிகள்)

(iii) அந்நியச் செலாவணிச் சந்தையில் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளின் இடப்பெயர்வுகளை ஏற்படுத்தும் **நான்கு** பிரதான காரணிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) பின்வரும் நாணய மாற்றுவீத முறைமைகளில் மத்திய வங்கியின் வகிபாகம் யாது?

(a) நிலையான நாணய மாற்று வீதம் (03 புள்ளிகள்)

(b) முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணயமாற்றுவீதம் (03 புள்ளிகள்)

(i) a. உள்ளக மாற்றுவீதம் என்பது பொருள்களுக்கிடையில் நிலவும் அமையச் செலவு விகிதத்தினால் தீர்மானிக்கப்படும்.

A. நாட்டின் அமையச் செலவு விகிதம் :

40 கார்கள் : 40 தொன் உணவு

1 கார் : 1 தொன் உணவு **(01 புள்ளி)**

B. நாட்டின் அமையச் செலவு விகிதம் :

60 கார்கள் : 30 தொன் உணவு

1 கார் : 0.5 தொன் உணவு அல்லது

1 தொன் உணவு : 2 கார்கள் **(01புள்ளி)**

b. இரு நாடுகளிலும் அமையச் செலவ விகிதங்கள் வேறுபட்டமைவதனால் இரு நாடுகளுக்கும் ஒப்பீட்டு நன்மை நிலவுகிறது.

| நாடு | கார் உற்பத்தியின் அமையச் செலவு | உணவு உற்பத்தியின் அமையச் செலவு |
|---|---|---|
| A | 1 கார் = 1 தொன் உணவு | 1 தொன் உணவு = 1 கார் |
| B | 1 கார் = 0.5 தொன் உணவு | 1 தொன் உணவு = 2 கார் |

**(அமையச் செலவைக்கணிப்பிட 02 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

- A நாடு உணவு உற்பத்தியில் அதிகுறைந்த அமையச் செலவைக் கொண்டுள்ளது. எனவே A நாடு உணவு உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது.

- B நாடு கார் உற்பத்தியில் அதிகுறைந்த அமையச் செலவைக் கொண்டுள்ளது. எனவே B நாடு கார் உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ளது.

**(விளக்கத்திற்கு 02 புள்ளிகள்)**

**(மொத்தம் 06 புள்ளிகள்)**

(ii) - ஏற்றுமதிப் பொருள்கள் சேவைகளின் பெறுமதிக்கும் இறக்குமதிப் பொருள்கள் சேவைகளின் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் தேறிய ஏற்றுமதிகளாகும்

**அல்லது**

- சென்மதி நிலுவையின் வர்த்தக நிலுவையுடன் சேவைகள் கணக்கு நிலுவையையும் கூட்ட வருவது தேறிய ஏற்றுமதிகளாகும்.

**(02 புள்ளிகள்)**

- நடைமுறைக்கணக்கு மீதியானது தேறிய ஏற்றுமதிகளுடன் தேறிய முதனிலை வருமானம் இரண்டாம் நிலை வருமானம் என்பவற்றையும் உள்ளடக்கியதாகும்.

**அல்லது**

- நடைமுறைக்கணக்கு நிலுவை என்பது வர்த்தக நிலுவை சேவைக்கணக்கு நிலுவை முதனிலை வருமானக்கணக்கு நிலுவை இரண்டாம் நிலை வருமானக் கணக்கு நிலுவை என்பவற்றையும் உள்ளடக்கியதாகும்.

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(iii)- உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் சேவைகளுக்கான கேள்வியில் ஏற்படும் மாற்றம்
- வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் சேவைகளுக்கான கேள்வியில் ஏற்படும் மாற்றம்
- உள்நாட்டில் முதலீடு செய்வதற்கான விருப்பத்தில் ஏற்படும் மாற்றம்
- வெளிநாட்டில் முதலீடு செய்வதற்கான விருப்பத்தில் ஏற்படும் மாற்றம்
- உள்நாட்டு நாணயத்தினதும் வெளிநாட்டு நாணயங்களினதும் சாத்தியமான எதிர்காலப் பெறுமதிகள் குறித்த வெளிநாட்டு நாணய வர்த்தகர்களின் எதிர்பார்க்கைகளில் ஏற்படும் மாற்றம்.
- நாடுகளுக்கிடையில் முதலீட்டின் விளைவு வீதங்களின் வேறுபாடு
- சார்பளவுப் பணவீக்க வேறுபாடுகள்
- அரசியல் மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள்
- அரசாங்கக் கடன் மட்டத்தில் ஏற்படும் வேறுபாடுகள்
- நாடுகளுக்கிடையில் சார்பு வருமான மட்ட வேறுபாடுகள்

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் மொத்தம் 04 புள்ளிகள்)**



Department of Examinations - Sri Lanka

(iv) a. – நிலையான நாணயமாற்றுவீத முறைமை: ஒரு மத்தியவங்கி உத்தியோகபூர்வமாக நிர்ணயிக்கபட்ட நாணயமாற்றுவீதத்தை பேணுவதற்காக தனது வெளிநாட்டு நாணய ஒதுக்குகளை முனைப்பாகப் பயன்படுத்துவதாகும்

**(01 புள்ளி)**

– வெளிநாட்டு நாணயச் சந்தையில் வெளிநாட்டு நாணயத்திற்கு மிகைக் கேள்வி நிலவும் போது உடனடியாக மத்தியவங்கி வெளிநாட்டு நாணயத்தை மேலதிகமாக சந்தைக்கு நிரம்பல் செய்வதன் மூலம் அதிகரித்த கேள்வியைப் பூர்த்தி செய்யும்

**(01புள்ளி)**

– வெளிநாட்டு நாணயச் சந்தையில் வெளிநாட்டு நாணயத்தின் (i.e. US dollars) மிகை நிரம்பல் காணப்படும் போது வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு செய்வதன் மூலம் மத்திய வங்கியானது மிகைநிரம்பலை அகற்றும். அதன் மூலம் நம்பகரமாக நிலையான நாணயமாற்றுவீதத்தை மத்தியவங்கி பேணலாம்.

**(01 புள்ளி)**

– முகாமை செய்யப்பட்ட மிதக்கவிடல்: சந்தையில் நிலவும் தளம்பல்களையும் ஏற்ற இறக்கங்களையும் கட்டுப்படுத்துவதற்காக ஒரு மத்தியவங்கி சந்தையில் தலையிட்டு வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு மற்றும் விற்பனை செய்வதாகும்

**(01 புள்ளி)**

– வெளிநாட்டு நாணயச் சந்தையில் தனது நாட்டு நாணயத்தின் பெறுமதி தேய்வடையும் போக்கு நிலவும் போது மத்திய வங்கி தனது நாட்டு நாணயத்தைக் கொள்வனவு செய்வதன் மூலம் சந்தையில் தலையிட்டு நாணயமாற்று வீதத்தை முகாமை செய்யும். இது உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி மேலும் தேய்வடைவதைத் தடுக்க உதவும்.

**(01 புள்ளி)**

– உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி அதிகரிக்கும் போக்கு சந்தையில் தென்படுமாயின் தனது நாட்டு நாணயத்தை விற்பனை செய்வதன் மூலம (உறிஞ்சல்) நாணயமாற்றுவீதத்தை முகாமை செய்யும். இது உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி மேலும் அதிகரிப்பதைத் தடுக்க உதவும்.

**(01 புள்ளி)**

**(மொத்தம் 06 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

9. (i) பொருளாதார வளர்ச்சி என்பது யாது? அது பொருளாதார வளர்ச்சி வீதத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? (04 புள்ளிகள்)
(ii) "அபிவிருத்தி என்பது ஒரு பல்பரிமாணச் செயன்முறையாகும்." விளக்குக. (04 புள்ளிகள்)
(iii) இலங்கையில் தற்காலத்தில் தொழில் வாய்ப்புக்களின் துறைசார் உள்ளடக்கத்தை (விவசாயம், கைத்தொழில், சேவைகள்) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைசார் உள்ளடக்கத்துடன் ஒப்பிடுக. (06 புள்ளிகள்)
(iv) முதலீட்டாளர்களுக்கு வழிகாட்டும் பின்வரும் பிரதான குறிகாட்டிகள் தொடர்பில் இலங்கையின் தற்போதைய நிலை யாது?
(a) வியாபாரம் செய்வதன் இலகுதன்மைக் குறிகாட்டி (Ease of Doing Business Index) (02 புள்ளிகள்)
(b) உலக போட்டித்தன்மை குறிகாட்டி (Global Competitiveness Index) (02 புள்ளிகள்)
(c) ஊழல் பற்றிய கருத்துக் குறிகாட்டி (Corruption Perception Index) (02 புள்ளிகள்)

(i) – பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு காலப்பகுதியில் பொருளாதாரத்தின் தேசிய வெளியீடு மற்றும் வருமானமட்டத்தை அதிகரிக்கும் வகையில் உற்பத்தி இயலளவில் (சாத்திய உற்பத்தி) ஏற்படும் ஒரு விரிவாக்கம் என வரைவிலக்கணப்படுத்தப்பட முடியும். இது நிரம்பல் மற்றும் கேள்வி மற்றும் வினைத்திறன் ஆகிய காரணிகள் இணைந்து செயற்படும் ஒரு இயங்கியல் செயன் முறையாகும்.

**(02 புள்ளிகள்)**

– பொருளாதார வளர்ச்சி வீதமானது இரு காலப்பகுதிகளுக்கிடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்படும் மாற்றத்தை அளவிடுகிறது.

**(01 புள்ளி)**

– பொருளாதார வளர்ச்சி வீதமானது வெளியீட்டில் ஏற்படும் மெய்ச் சதவீத மாற்றத்தை அளவிடு கிறது. அதேவேளை பொருளாதார வளர்ச்சியானது பொருளாதாரத்தின் சாத்தியவள வெளியீட்டுக் கொள்ளளவில் ஏற்படும் வளர்ச்சியை அளவிடுகிறது.

**(01 புள்ளி)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

(ii) – அபிவிருத்தி என்பது பொருளாதாரப் பரிமாணங்களும் பொருளாதாரமல்லாப் பரிமாணங்களும் முக்கியத்துவம் பெறும் ஒரு பல்பரிமாணச் செயன்முறையாகும். எனவே அபிவிருத்தி என்பது வளர்ச்சி மற்றும் ஒப்புரவு போன்ற பல்வகைக் குறிக்கோள்களை ஏககாலத்தில் எய்துவதாகும்.

**(02 புள்ளி)**

– அபிவிருத்தி என்பது வாழ்க்கைத் தரத்தில் ஏற்படும் முன்னேற்றமாகும். பல்பரிமாண அபிவிருத்தி என்னும் பதம் அபிவிருத்தி என்பது ஒரு விடயமல்ல. மாறாக அது மிகப்பரந்த ஒரு பதமாகும். அதில் சமூக அபிவிருத்தி பொருளாதார அபிவிருத்தி சுற்றாடல் முகாமைத்துவம் பால்நிலைச் சமத்துவம் அரசியல் வலுவூட்டல் மற்றும் குடித்தொகை அபிவிருத்தி போன்ற சாத்தியமான பல காரணிகளை யும் உள்ளடக்கியுள்ளது.

**(02 புள்ளி)**

Department of Examinations Sri Lanka

(iii)

| துறை | 2020 | | 2019 | |
|---|---|---|---|---|
| | மொ. உ.உ | தொழில் வாய்ப்பு | மொ. உ.உ | தொழில் வாய்ப்பு |
| விவசாயம் | 7.0 % | 27.1 % | 6.9% | 25.3 % |
| கைத்தொழில் | 25.5 % | 26.9 % | 26.4 % | 27.6 % |
| பணிகள் | 58.7 % | 46% | 57.5 % | 47.1 % |

**(சரியான 01 தரவுக்கு 01 புள்ளி மொத்தம் 06 புள்ளிகள்)**

(iv)

| குறிகாட்டி | இலங்கையின் பிந்திய சர்வதேச தரப்படுத்தல் |
|---|---|
| 1. வியாபாரம் செய்வதன் இலகுதன்மைக் குறிகாட்டி (2020) | 99 / 190 |
| 2. உலக போட்டித்தன்மைக் குறிகாட்டி (2019) | 84 / 141 |
| 3. ஊழல் கருத்துருவக் குறிகாட்டி (2020) | 94 / 180<br>102 / 180 (2021) |

**(ஒரு சுட்டெண்ணுக்கு 02 புள்ளிகள் மொத்தம் 06 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**10.** (i) நாணயப்பரிமாற்று உடன்படிக்கை (currency swap agreement) என்றால் என்ன? இலங்கையிலிருந்து ஓர் உதாரணம் தருக. (04 புள்ளிகள்)

(ii) இலங்கைப் பொருளாதாரத்தில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும் போட்டித்தன்மையையும் தடுக்கும் முக்கியமான பிரச்சினைகளுக்குரிய துறைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கை தற்போது எதிர்கொள்ளும் அந்நியச் செலாவணிப் பிரச்சினையிலிருந்து மீளுவதற்கு நீர் பரிந்துரைக்கும் கொள்கை விதந்துரைப்புக்கள் யாவை? (04 புள்ளிகள்)

(iv) அண்மைய ஆண்டுகளில் **பொருளாதார வளர்ச்சி வீதம், வரவு செலவுத் திட்டக் குறை நிலை, வர்த்தக நிலுவைக் குறைநிலை** மற்றும் **பொதுப்படுகடன்** ஆகிய துறைகளில் இலங்கைப் பொருளாதாரம் எவ்வாறு செயலாற்றியுள்ளது என்பதனை பொருத்தமான புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தி சுருக்கமாக விவரிக்குக. (08 புள்ளிகள்)

- நாணப் பரிமாற்றுகள் பெரும்பாலும் கடன்களைத் தீர்ப்பதுடன் தொடர்புபட்டிருப்பதுடன் இருதரப்பினரும் பரிமாறிக்கொள்ளும் தொகைக்குரிய வட்டியையும் ஒருவருக்கொருவர் வழங்குவர். ஒரு நாணயப் பரிமாற்றில் எதிரெதிர் தரப்புகள் இரு நாணயங்களில் தரப்பட்ட தொகைளைப் பரிமாறிக் கொள்வர். உதாரணமாக ஒரு தரப்பு 100 மில்லியன் பிரித்தானியப் பவுணை பெறும் அதே வேளை மற்றைய தரப்பு 125 மில்லியன் டொலர்களைப் பெறுகிறது. இதன் கருத்து GBP/USD பரிமாற்ற வீதம் 1.25 என்பதாகும். ஒப்பந்தக்கால முடிவில் இருதரப்பினரம் ஆரம்ப நாணயமாற்று வீதத்தில் அல்லது முன்கூட்டியே ஒத்துக்கொண்டதொரு வீதத்தில் தொகைகளைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் கொடுக்கல்வாங்கலை முடிவுக்குக் கொண்டுவருவர்.

**(02 புள்ளிகள்)**

உதாரணங்கள் :

இலங்கை ஆரம்பத்தில் சார்க் நாடுகளுக்கு வழங்கப்படும் 400 அமெரிக்க டொலர் பெறுமதியான பரிமாற்ற உடன்படிக்கையை 2020இல் கைச்சாத்திட்டது அதனை ஒரு வருட நீடிப்பின் பின்னர் 2021 பெப்ரவரி மாதத்தில் மீளச் செலுத்தியது. On 24th July 2020 ஜுலை 24ஆந் திகதி சார்க் நாடுகளுக்கான நாணய பரிமாற்று உடன்படிக்கையின் கீழ் 2019 -2022 காலப்பகுதிக்கு நாணயப்பரிமாற்று உடன்படிக்கையை செய்தது அதன் படி நாட்டின் சென்மதி நிலுவைத் தேவைக்காக இலங்கை மத்தியவங்கிக்கு குறுங்கால நிதிவசதிகளைப் பெற முடியும்.

- 2021 இல் இலங்கை மத்தியவங்கியும் சீன மக்கள் வங்கியும் இருபக்க பரிமாற்று உடன்படிக்கையைச் செய்து கொண்டன. இவ்வுடன்படிக்கையின் கீழ் இலங்கை மத்தியவங்கி 10 பில்லியன் யுவான் (சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) பரிமாற்றினை இலங்கை மத்தியவங்கி பெறத்தகுதியுடையது. இவ்வுடன்படிக்கை மூன்றுவருடகாலத்திற்கு செல்லுபடியானதாகும்.

Department of Examinations - Sri Lanka

- இலங்கைப்பொருளாதாரத்தை ஊக்கப்படுத்தும் வகையில் மே மாதம் 2021 இல் வங்காளதேசம் 200 மில்லியன் டொலர் பெறுமதியான நாணயப்பரிமாற்றுக் கடன் வசதியினை இலங்கைக்கு வழங்கியது. இதன் மூலம் இவ்வருடத்தில் இந்தத் தீவு நாட்டிற்கு அத்தியாவசியமான நிதியுதவி வழங்கிய முதலாவது தெற்காசிய நாடாக அது மாறியது.

**(ஒரு உதாரணத்திற்கு 02 பள்ளிகள்)**

**(மொத்தம் 04 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

(ii)
- பேரினப்பொருளாதார உறுதியற்றநிலை
- கட்டுப்பாடுமிக்க தொழிலாளர் சட்டங்கள்
- கொள்கை ஒத்திசைவு குறைவாக இருத்தல்
- ஊழல்
- வினைத்திறனற்ற வரி முறைமை
- வரிக்கட்டமைப்பின் சிக்கல்வாய்ந்த தன்மை
- தகவற் தொழில் நுட்ப முறை பயன்படுவதில் குறைந்த ஈடுபாடு
- சட்ட நடைமுறைகளின் வினைத்திறனின்மை
- பலவீனமான உட்கட்டமைப்பு வலைப்பின்னல்
- வினைத்திறனற்ற அரசாங்க நிருவாகக் கட்டமைப்பு
- புத்தாக்கம் புனைவதற்கான இயலுமை போதாமை

**(ஒவ்வொன்றிற்கு 01 புள்ளி வீதம் ஏவையேனும் 04 விடயங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(iii) **குறுங்காலக் கொள்கைகள் :**
- அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தல்.
- தற்போதுள்ள கடன்களின் மீள்செலுத்தும் தவணைக்காலத்தை நீடிக்கும் திட்டம்
- நாணயமாற்று வீதத்தை சந்தைச் சக்திகளால் தீர்மானிக்கப்பட அனுமதித்தல்
- பரிமாற்றக் கடன் வசதிகளை ஏற்படுத்தல்
- சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறல்

**நீண்டகாலக் கொள்கைகள் :**
- ஏற்றுதித்துறைக்குப் புத்துயிரளித்தல்
- பேரினப்பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணல்
- உலக உற்பத்தி வலையமைப்புகளை சென்றடைவதற்கான வாய்ப்பகளைப் பெறல்
- சாதகமான தாராள சந்தை உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் வழிகளை காணல்
- வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவரப் பொருத்தமாக சூழலை உருவாக்குதல் - ஆய்வு மற்றும் அபிவிருத்தித்துறையில் முதலீடுகளை மேற்கொள்ளல்.

- வினைத்திறனான இறக்குமதி பதிலீட்டுத் திட்டத்தை வலுப்படுத்தல்
- வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு மேலும் அதிக வசதிகளைப் பெற்றுத் தரல்.

**(ஒவ்வொன்றிற்கு 01 புள்ளி வீதம் ஏவையேனும் 04 விடயங்களுக்கு மொத்தம் 04 புள்ளிகள்)**

(iv) - பொருளாதார வளர்ச்சி வீதம்: இலங்கை அண்மைய ஆண்டுகளில் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியை அடையத் தவறிவிட்டது.

**(01 புள்ளி)**

- பொருளாதார வளர்ச்சி வீதம்: 2018: 3.3% ; 2019: 2.3%; 2020: -3.6%

**(01 புள்ளி)**

- பாதீட்டுக் குறைநிலை: அரசாங்க வருவாய்களின் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி மற்றும் சடுதியாக அதிகரித்துச் செல்லும் ஆரசாங்கத்தின் மீளெழும் செலவினங்கள் மற்றும் கோவிட் 19 கொள்ளை நோயின் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் சுருங்கியுள்ளமைக்கு மத்தியில் பாதீட்டுக் குறைநிலையானது விரிவடைந்து சென்றுள்ளது.

**(01 புள்ளி)**

- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக பாதீட்டுக் குறைநிலை:
2018: 5.3%; 2019: 9.6%; 2020: 11.1% **(01 புள்ளி)**

- வர்த்தகக் குறைநிலை: வர்த்தகக் கணக்குக் குறைநிலையானது அண்மைய ஆண்டுகளில் கணிசமானளவு குறைவடைந்து 2010ஆம் ஆண்டின் பின்னர் மிகத்தாழ்ந்த மட்டத்திற்குச் சுருங்கியுள்ளது. கடந்த இரு வருடங்களில் வர்த்தக நிலுவையின் முழுமையான சுருக்கமானது பண்ட இறக்குமதிகள் மீதான செலவீடுகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தமையினால் ஏற்பட்டதாகும். **(01 புள்ளி)**

- வர்த்தகக் குறைநிலை 2018: ஐ.டொ 10இ343 மில்லியன் 2019: ஐ.டொ 7997 மில்லியன் 2020: ஐ.டொ 6008 மில்லியன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகக் குறைநிலை: 2018: 11.7% 2019: 9.5%; 2020: 7.4%

**(01 புள்ளி)**

Department of Examinations - Sri Lanka

- பொதுப்படுகடன்: வெளிநின்ற பொதுப்படுகடன்கள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் பொதுவான போக்கினைக் கொண்டிருந்த போதிலும் அண்மைய ஆண்டுகளில் அதன் வளர்ச்சி வேகம் துரிதமடைந்துள்ளது. அரசாங்க வருவாயில் ஏற்பட்ட வீழ்ச்சியும் மீளெழும் செலவினங்களின் அதிகரிப்பும் பெயரளவு ரீதியிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சார்பாகவும் பொதுப்படுகடனின் துரிதமான அதிகரிப்பிற்கு பிரதானமாகப் பங்களித்துள்ளன.

**(01 புள்ளி)**

- வெளிநின்ற பொதுப்படுகடன்:
- மத்திய அரசாங்கத்தின் மொத்த வெளிநின்ற கடன்கள்:

  2018 : ரூபா. 12031 பில்லியன் (மொ.உ.உ இன் 83.7%)

  2019 : ரூபா. 13,032 பில்லியன் (மொ.உ.உ இன் 86.8%)

  2020 : ரூபா. 15,117 பில்லியன் (மொ.உ.உ இன் 101%)

- மொத்த வெளிநின்ற பொதுப்படுகடன்:

  2018 : ரூபா. 13,178 பில்லியன் (மொ.உ.உ இன் 91.7%)

  2019 : ரூபா. 14,155 பில்லியன் (மொ.உ.உ இன் 94.3%)

  2020 : ரூபா. 16,427 பில்லியன் (மொ.உ.உ இன் 109.7%)

**(01 புள்ளி)**

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka